Chundikuli Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 ஆடி 7 ஜுலை௧ 3 இதழ் 162

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22-7-1985

திம்புபேச்சின்போது இலங்கை நிகழ்வுகள்

## இலங்கை அரசின்தூய்மையை சந்தேகிக்கவைக்கிறது —கருணாநிதி

(சென்னை)

''இலங்கையின் இனப்பிரச்சனைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்காகப் பூட்டானின் தலைநகரான திம்புவில் மாநாடு நடந்து கொண்டிருந்த பொழுது இலங்கையில் தமிழர்களைக் கொலை செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன'' என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு. கருணாநிதி நேற்று திருச்சியில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

''திம்புவில் சமாதானப்பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்த பொழுது இலங்கையில் தமிழர்களை கொலை செய்யும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்றுவந்தமை இலங்கைஅரசின் இதயத்தூய்மையைச் சந்தேகிக்க வைக்கிறது'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

● போர்நிறுத்தம் ஏற்பட்டு 34வது நாள்

# ராணுவம்-தீவிரவாதிகள் நேற்று

# பொலிகண்டியில் கடும் சமர்!

## மக்கள் பீதியால் அயல் கிராமங்களுக்கு ஓட்டம்

(அலுவலக - கரவெட்டி நிருபர்கள்)

பொலிகண்டியில் நேற்று ஞாயிறு அதிகாலை இராணுவத்தினருக்கும் தீவிரவாத இளைஞர்களுக்குமிடையே கடும் சமர் நடந்தது. இதனைத் தொடர்ந்து பொலிகண்டிக் கிராமம் பெரும் பதற்றத்திற்குள்ளானது பீதியினால் மக்கள் அயல் கிராமங்களுக்கு ஓடித் தஞ்சமடைந்தனர்.

தீவிரவாதிகளின் முகாம் ஒன்றின்மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனை எதிர்த்துத் தீவிரவாதிகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரியவருகிறது.

இரு தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற இம்மோதலில் ஒருபகுதியினருக்குப் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது

தீவிரவாதிகளின் முகாமிலிருந்த வாகனம் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கடல் மார்க்கமாக வள்ளங்களில் வந்த ஆயுதப் படையினர் பொலிகண்டியில் உள்ள முகாமுக்கு அருகாமையில் உள்ள கராஜ் ஒன்றில் பதுங்கி இருந்ததாகவும், இராணுவத்தினரின் நடமாட்டத்தை அவதானித்த தீவிரவாதிகள் முகாம் காவலர் ஒருவர் 'கிறனேட்' எறிந்ததைத் தொடர்ந்து பலத்த வெடிச் சத்தங்கள் இருபகுதியிலுமிருந்து கேட்டதாகவும், இருபகுதியினருக்குமிடையே பலத்த மோதல் இடம் பெற்றிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது

இம்மோதல் நேற்று அதிகாலை நான்குமணி வரை நீடித்ததாம்.

குண்டு வெடிச்சத்தமும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்கத் தொடங்கவே அப்பகுதி மக்கள் பீதியடைந்து அயல் கிராமங்களுக்கு ஓடித் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த இருநாட்களாக இப்பகுதிமீது ஹெலிகொப்டர்கள் தாளப்பறந்து வட்டமிட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

அரசு அறிவிப்பு:

## ராணுவத்தில் ஒருவர் பலி! இரு தீவிரவாதிகள் காயம்

(கொழும்பு)

பொலிகண்டிப் பகுதியில் நேற்று அதிகாலை ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கிய பொழுது இராணுவ வீரர்ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றும்இரு வீரர்கள் காயமடைந்துள்ளதாகவும் அரசவட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திடீர் தாக்குதலை எதிர்த்து இராணுவத்தினர் திருப்பிச் சுட்டபொழுது இரு தீவிரவாதிகள் காயமடைந்ததாகவும் தீவிரவாதிகளிடமிருந்து தன்னியக்கத்துப்பாக்கிஒன்றையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன (து)

## "வன்முறைகள்மூலம் எந்தப் பிரச்சனையையும் தீர்க்க முடியாது" — பிரதமர்

(கொழும்பு)

''ஜனநாயக வழியைவிட்டு வன்முறைகள்மூலம் எந்த ஒரு பிரச்சனையையும் தீர்த்துவைக்க முடியாது'' என்று பிரதமர் ஆர். பிரேமதாசா கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மத்திய கொழும்பு ஐ.தே கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் பிரதமர் இவ்வாறுகூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''தீர்க்கதரிசனமான கொள்கைகளை அரசு கடைப்பிடித்து வருவதனால் இந்த அரசாங்கத்தைத் தோல்வியடையச் செய்யமுடியாதென்று நன்கு உணர்ந்துள்ள மக்கள் விரோதிகள் வன்முறைகளை மேற்கொண்டு அரசாங்கத்திற்குத் தொந்தரவுகொடுக்க முயற்சி செய்துவருகிறார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயங்களுடன் இருசடலங்கள்

(திருகோணமலை)

ஏருவூரில் ஒரு பஸ்தரிப்பு நிலையத்தில் நேற்றுக் காலை இரண்டு பேரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கட்டப்பட்டிருந்தன.

இந்தச்சடலங்கள் அருகருகே உள்ள கம்பங்களில் கட்டப்பட்டிருந்தனவாம்.

## கைதான இளைஞரிடம் போலிக்கடவுச்சீட்டு தங்கக்கட்டிகளும் இருந்தனவாம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையப் பொலிஸ் அதிகாரிகள் இந்தியா செல்லவிருந்த இளைஞர் ஒருவரை விசாரணை செய்த பொழுது அவரிடம் மோசடி செய்யப்பட்ட போலிக் கடவுச்சீட்டு இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இதைத் தொடர்ந்து அவரைத் தீவிர பரிசாதனை செய்த பொழுது அவரிடம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஐந்து தங்கக்கட்டிகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்படவிருந்த இத்தங்கக்கட்டிகள் லண்டனில் தயாரிக்கப்பட்டவை யென்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

[9-ம் பக்கம் பார்க்க]

தேவை

(1) Power Loom Technician

ஜப்பான் (Japan) மின்தறியில் குறைந்தது நான்கு வருடம் அனுபவமுள்ள தகுதியானவருக்கு 1,500/- — 2,000/- உட்பட்ட சம்பளம் வழங்கப்படும்.

(2) மின்தறி நெசவாளர் (Weaver)

தரமான புடவை உற்பத்தி செய்யக்கூடிய குறைந்தது நான்கு வருடம் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அனுபவம், தகுதி அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

(ரூபா 25 தொடக்கம் ரூபா 35 வரை)

வயது: 22 தொடக்கம் 30ற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) Warper / Supervisor

வார்ப்பிங் மெசின் ஓட்டக் கூடியவரும்,
மின்தறி மேற்பார்வையாளராக [Supervisor]
கடமையாற்றக்கூடிய பெண் ஊழியர் விரும்பப்படுவர்.

குறிப்பு:

தங்குமிட உணவு வசதிகட்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்

நேர்முகப் பரீட்சைக்கு 27-7-85 — 28-7-85 காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

SRIRAMS WEAVING (PVT) LTD.,
KONDAVIL ROAD,
IRUPALAI — KOPAY.

(4550)

# அரிவிளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் தபாற்கந்தோர் வீதியில் 1 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு "ரோஸ்கோட்டேஸ்", Manipay அல்லது 195, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (4560)

பி. எஸ். ஏ. எஞ்சின் சேர்ந்து குட் இவப் (F) வாட்டர் பம் விற்பனைக்குண்டு தொடர்பு: ஞானம்ஸ், முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னுகம். [4579]

FISHMAX (மீன்சாப்பாடு) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G.M. Stores, 777, K K.S Road and 208, 1st Cross Street, JAFFNA. 4435

பலாலி ரோட், வசாவிளான் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ம குமரேசன், தைலன்கடவை, குப்பிளான். 4581

சாப்பாட்டுக்கடை, வகுப்புகள் நடத்த உகந்த புதிய தளபாடங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ரவி அன் ராஜ் 77, பெரியகடை, யாழ்ப்பாணம். 4570

மரம் அரியும் யந்திரங்களும் தச்சுவேலை செய்யும் யந்திரங்களும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஜப்னு எலற்றிக்கல்ஸ். ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம், ச. நாகராசா, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 4524

சில்லறைக் கடைகளுக்குரிய விருக்கி ஷோக்கேஸ் (Show-Case) மண்ணெண்ணை Stand வேறு பொருட்களும் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: 23, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 4563

டச் ரோட்டில் ஆஸ்பத்திரி, சந்தை, பாடசாலைக்கு அருகாமையில் இரண்டு அறைகள் கொண்ட வீட்டுடன் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு அப்துல் ரஹீம், நியுமுத்து மார்க்கட், சாவகச்சேரி. அல்லது முகிடீன் மக்வின்ஸ், 165, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். 4583

## கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாண நகரில் களவு போன ஒரு சைக்கிளை புன்னாலைக்கட்டுவன் வடக்கு — கப்பன்புலம் விழிப்புக்குழுவினர் கைப்பற்றியுள்ளனர். உரியவர்கள் நேரில் வந்து தகுந்த அத்தாட்சிக் காண்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு; ம. பிலிப்ராசா, கப்பன்புலம், புன்னாலைக் கட்டுவன். [4590]

## தேவை

கைக்கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், திருத்துவதில் கைதேர்ந்த ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளப்படும். 20-07-85 தொடக்கம் 25-07-85 இடையில் தொடர்பு கொள்ளவும். தேவன் வோச் வேக்ஸ், 64, பஸ்நிலையம் முன்பாக, சுன்னுகம். 4561

கோழிப்பண்ணையை மேற்பார்வை செய்ய நல்ல திறமையும் முன் அனுபவமும் உள்ள ஒருவர் தேவை. வயது 35க்கு மேல் இருக்கவேண்டும் தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4594, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (4594)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கூறுவிலை கோரல்

### மின்தூண் ஏற்றிப்பறித்தல்

பாசையூர் மின்சாரத் தூண்கள் தயாரிக்கும் இடத்திலிருந்து யாழ்ப்பாண நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட வேலைத்தளங்களுக்கு 25', 28', 30' அடி நீளமுள்ள மின்சாரத் தூண்களைச் சேதம் எதுவுமின்றி வண்டியில் ஏற்றிப் பறிப்பதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 30-7-85-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கடித உறையின் இடது மேல் பக்கத்தில் "தூண் ஏற்றிப்பறிப்பதற்கான கூறுவிலை" என எழுதப்பட்டிருக்கவேண்டும்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
18-7-85. [4572]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பராசக்தி (தேவி) இராசரத்தினம்



அன்புக் கணவர், அருமை மகள்.

அவின இல்லம்,
வசாவிளான். (3900)

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற சங்கரன் மனேகரன், 15, விக்டோரியா ரோட், யாழ்ப்பாணம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர் ஐயப்பன் சங்கரன், 15, விக்டோரியா ரோட், யாழ்ப்பாணம்.

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 3883

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 28-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றுர்.

1985-ம் ஆண்டு 4-ம் 24-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி.
கு. குலசிங்கம்
பதிவாளர்.

28-6-85

காரணம் காட்டும் தேதி 23-8-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்
4537 பதிவாளர்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தொல்புரம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் நரசிங்கம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி / 241

சோமசுந்தரம் நரசிங்கம் கைம்பெண் நடேஸ்வரி தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

மனுதார்.

எதிராக

1. நரசிங்கம் நிர்மலன்.
2. நரசிங்கம் கோகுலன்.
3. நரசிங்கம் மகள் நளாயினி, எல்லோரும் தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ம் திகதி முற்பகல் 8 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 28-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

தயாரித்தவர்,
க. குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.

4548

## சமாதான சபைக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சமாதானசபை, அப்பகுதியில் பலவருடகாலமாக தீர்க்கப்படாதிருந்துவந்த காணி கொடுக்கல்வாங்கல் போன்ற பல்வேறு பிரச்னைகளைச் சுமுகமான முறையில் தீர்த்துவருவதையிட்டு அப்பகுதி மக்கள் பாராட்டுத்தெரிவித்துள்ளனர்.

இச்சபையின் நிர்வாகிகளா (7-ம் பக்கம் பார்க்க)

## வேண்டுகோள்

கடந்த 5-7-85 வெள்ளிக்கிழமை அன்று புளியங்குளத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட 26 சிறீ 2263 இலக்க லொறி பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை இதனைக் கடத்தியவர்கள் தயை கூர்ந்து லொறியையும், பொருட்களையும் தொழிலாளர்களுடன் திருப்பி ஒப்படைக்கும் வண்ணம் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்,

ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்,
113 1/1, கண்டி வீதி, கிளிநொச்சி.
4575

## திருமண நன்றி நவிலல்

### செந்திரு — குகதரன்

திரு K C. பத்மநாதன் திருமதி பகிரதி பத்மநாதனும், திரு வன்னியசிங்கம் திருமதி வன்னியசிங்கமும் முறையே தங்கள் புத்திரி செந்திரு (Attorney - at - Law) தங்கள் புத்திரன் குகதரன் (Chartered Accountant) இருவருக்கும் அண்மையில் வெள்ளவத்தை. சம்மாங்கோட்டார் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆசிச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும். அன்பளிப்புகள் வழங்கியவர்களுக்கும் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறுர்கள். (4591)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### செல்வி தி'ரசா இராசமணி சொலமன்

மலர்வு: 7-7-1918 உதிர்வு: 22-6-1985



அன்பின் திருஉருவே!
கற்பின் ஜோதியே!
பண்பின் இருப்பிடமே!
இனிய பேச்சால் அறிவூட்டி, சிரிப்பூட்டி, பாதுகாத்து வளர்த்த எங்கள் அன்புத் தெய்வமே. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தங்கை:- நவமணி அருளானந்தம்,
மைத்துனன்:- T. அருளானந்தம்,
பிள்ளைகள்:- சரோ, எட்வேட், மனே. றவி, சாந்தி. பேனுட், மாலா,
மருமக்கள்:- மூர்த்தி, பாலசுந்தரம்,
பேரப்பிள்ளைகள்:- அருண், பாபு, சசி. நிம்மி.

T. அருளானந்தம்,
60/1 (A), சொலமன் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (4476)

## மரண அறிவித்தல்

### தம்பையா செல்லத்துரை ஐயர்

கட்டுவன் சைவ மடத்தடியைச் சேர்ந்த காலம் சென்ற தம்பையா தம்பதிகளின் மகன் ஓய்வுபெற்ற யாழ். ஐக்கிய மாகாண வங்கிக் காசாளர் செல்லத்துரை அவர்கள் 19-07-85 இல் காலமானுர். இவர் காலஞ்சென்ற தொல்புரம் ஐயாத்துரை தம்பதிகளின் மகள் ஈஸ்வரியின் அன்புக் கணவரும். தருமவதி, காலஞ்சென்ற மகேந்திரராசா (இலங்கை வங்கி), நீதிமதி, நவரத்தினராசா, பானுமதி, செல்வராசா, குகதாசன், ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்கந்தராசாவின் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற சோமசுந்தரக் குருக்கள், வேலாயுதர் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனரும், தாரிணியின் அன்புப் பேரனும் ஆவார். அன்னுரின் தகனக்கிரியைகள் (19-07-85) வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கொத்தியாகல் மயானத்தில் நடைபெற்றது. உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும். (4596)

## 25 வருடங்களின் பின்னர்—

# தென் ஆபிரிக்காவில் கறுப்பர் வாழும் பகுதிகளில் அவசரகாலச்சட்டம்!

## கடுமையாக அமுல்படுத்த பொலிஸ், இராணுவத்திற்கு கூடுதல் அதிகாரங்கள்!!

ஜோஹனர்ஸ்பேர்க், ஜூலை 21

தென்னுபிரிக்காவில் கறுப்பர்கள் பெரும்பான்மையாக வாழும் 36 மாவட்டங்களிலும் அதனை அண்டியுள்ள நகரங்களிலும் அவசரகாலச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இச் சட்டம் தென்னுபிரிக்காவில் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் அமுலாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு வருடகாலமாக தென்னுபிரிக்காவில் இடம்பெற்றுவரும் வன்முறைகளை யடுத்தே இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக தென்னுபிரிக்க அரசு அறிவித்துள்ளது

### கூடுதல் அதிகாரம்

பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் இச் சட்டத்தின் கீழ் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன கலகக்காரர்களை சுற்றிவளைத்துப் பிடித்தல், தேவையான பகுதிகளைச் சோதனையிடல், ஊரடங்குச் சட்டங்களை விதித்தல் உட்பட பத்திரிகைத்தணிக்கைகளை கொண்டுவருதலும் இந்த அதிகாரங்களுள் அடங்கும் இதனையடுத்து சகல அத்தியாவசியசேவைகளும் பாதுகாப்புப் படைகளால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

25 வருடங்களுக்கு முன்னர் சுமார் 70 தென்னுபிரிக்கர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து இங்கு முதல்தடவையாக அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

### 500 பேர் பலி

சுமார் 500 பேர் கடந்த ஒரு வருடகால வன்முறைகளில் கொல்லப்பட்டுள்ளனர் இவர்கள் அனைவரும் பொலிஸாரின் அடக்குமுறைநடவடிக்கைகளினுலேயே கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னுபிரிக்க விடுதலைப் போராட்ட இயக்கமான 'ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' இந்த அவசரகாலச்சட்டத்தை வெகுவாகக் கண்டித்துள்ளது தென்னுபிரிக்கக் கறுப்பர்களின் சுதந்திரவேட்கையை மழுங்கடிப்பதே இச்சட்டத்தின் நோக்கம் என்று இந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

### வெற்றி

இதேவேளை இந்த அவசரகாலச்சட்ட அமுலாக்கம், ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் நடவடிக்கைகளுக்கு ஒரு வெற்றி எனவும் கூறப்பட்டது ஏனெனில் கறுப்பர்கள் வாழும் இடங்களில் வெள்ளையராட்சியை முற்றிலும் ஸ்தம்பிதமடையச்செய்த காரணத்தினுலேயே இச்சட்டம் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

---

## சிகிச்சையின் பின்னர் றீகன் வெள்ளைமாளிகைதிரும்பினுர்

வாஷிங்டன், ஜூலை 21

அமெரிக்க அதிபர் திரு. ரெனுல்ட் றீகன், வைத்திய சிகிச்சையின் பின்னர் நேற்று வெள்ளைமாளிகை திரும்பினர்.

அமைச்சர்கள், வெள்ளைமாளிகை ஊழியர்கள் உட்பட சுமார் இரண்டாயிரம் பேர் வைத்தியசாலையிலிருந்து ஹெலிகாப்டரில் வந்திறங்கிய திரு றீகனை வெள்ளைமாளிகை வளவில் நேற்று வரவேற்றனர். திரு. றீகனுடன் அவரது மனைவியும் வந்திருந்தார்.

நல்ல சுகத்துடன் இருப்பதைத் தம்மால் உணரமுடிகின்றதெனவும் தமது உத்தியோகபூர்வ அலுவல்களை விரைவில் ஆரம்பிக்கத் தாம் ஆர்வமாக இருப்பதாகவும் திரு றீகன் தெரிவித்தார்.

கடந்த வாரம் வைத்தியசாலையில் தாம் இருந்தபோதிலும் அரசியல்விடயங்களைத் தாம் வெகு அவதானமாக அவதானித்துவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

திரு றீகனின் குடல்பகுதியில் புற்றுநோய் அறிகுறிக்கான கட்டி ஒன்று வளர்ந்திருந்ததையடுத்து. சத்திரசிகிச்சைமூலம் அக் கட்டி அகற்றப்பட்டது தெரிந்ததே. [கி]

---

## புளோரிடா கடலில் 17ம் நூற்றுண்டைச்சேர்ந்த கடல் புதையல்!

வாஷிங்டன், ஜூலை 21

அமெரிக்க கடல் சுழியோடிகள் 17ம் நூற்றுண்டைச்சேர்ந்த கோடிக்கணக்கான டாலர்கள் பெறுமதியுடைய 'புதையலை' நேற்றுக்கண்டு பிடித்தனர்!

இப்புதையல் 1639ம் ஆண்டு அமெரிக்காவின் புளொரிடா கரைக்கு அப்பால் மூழ்கிய ஸ்பானியக்கப்பல் ஒன்றின் சிதைவுகளுக்குள்ளிருந்தே மீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வெள்ளிப்பாளங்கள், நாணயங்கள். உட்பட சுமார் 400 மில்லியன் டாலர்கள் பெறுமதியுடையதாக இக் கடல் புதையல் காணப்படுகின்றதென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இக்கடலாய்வுப்பணிக்கென சுமா 15 வருடங்களை அமெரிக்க சுழியோடிகள் கழித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

---

## சென்னையில்— சட்டவிரோத கஸெட்டுகள் பொலிசாரினுல் பறிமுதல்!

சென்னை, ஜூலை 21

சென்னையில் உள்ள வீடியோ கஸெட் விநியோக நிலையங்களில் நேற்று நூற்றுக்கணக்கான சட்டவிரோத கஸெட்டுக்களைப் பொலிஸார் கைப்பற்றினர். அத்துடன் இவற்றின் உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீடியோ கஸெட்டுக்களின் விநியோக விதிமுறைகள் மீறப்பட்டது தொடர்பாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தணிக்கைக்குட்படாத திரைப்படங்களின் பிரதிகளும் இக் கைப்பற்றப்பட்ட 'கஸெட்டுக்'களில் காணப்பட்டன அத்துடன் திரைப்படம் ஒன்று வெளியானதும் 5 ஆண்டுகளின் பின்னரே அதன் வீடியோ கஸெட்டை வெளியிடமுடியும்.

ஆனுல் நேற்று பறிமுதல் செய்யப்பட்ட 'கஸெட்டுக்'களில் பல புத்தம் புதிய படங்களின் பிரதிகளைக் கொண்டிருந்தன என்றும் கூறப்பட்டது. [கி]

---

## மருந்துகள் வந்தன

[சுழிபுரம்]

யாழ். மாவட்ட சபை சுழிபுரம் உப-அலுவலகம் நடாத்தும் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு ரூபா பத்தாயிரம் பெறுமதியான மருந்துவகைகள் வந்து சேர்ந்துள்ளன.

பல வகையான நோய்களுக்கு தேவையான மருந்துவகைகள் இவற்றில் அடங்கியுள்ளது இவ் இலவச வைத்தியசாலையில் தினமும் ஐம்பதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் மருந்துபெற்று வருகின்றனர். மேலும் வேண்டிய மருந்துகளை பெற்றுக்கொள்ள அபிவிருத்திச் சபையினர் முயன்றுள்ளனர்.

---

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 17-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று, வரும் 30-ம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெறும்.

---

## சுந்தரர் குருபூசை

(கல்வியங்காடு)

எதிர்வரும் 25-ம் திகதி வியாழக்கிழமை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் சுந்தரர் குருபூசை கொண்டாடப்படவுள்ளது இவ்விழாவில் வித்துவான் சி. குமாரசுவாமி சொற்பொழிவு ஆற்றுவார்.

---

## 'பாடசாலைகளின் உயிர்நாடி ஆரம்பப்பாடசாலைகள்'

### கல்வி அதிகாரி பேச்சு

(யாழ்ப்பாணம்)

''பாடசாலைகளின் உயிர்நாடியே ஆரம்ப பிரிவுதான். ஆரம்ப பிரிவுகள் திறம்பட தொழிற்பட்டால்தான் ஏனைய உயர்வகுப்புக்களும் சிறப்பாக செயற்படமுடியும். என்று பிரதம கல்வி அதிகாரி திரு வெ சபாநாயகம், கோப்பாய் கல்வி மூலவள நிலையம் நடாத்திய அழகியற் கருத்தரங்கில் ஆரம்ப உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் ஆண்டு ஒன்று, ஆண்டு நான்கில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், சங்கீத ஆசிரியர்களுக்குமான அழகியற் பயிற்சிக் கருத்தரங்கை புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில அமைந்துள்ள கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ வ தங்கராசா தலைமையில் நடத்தியது. இக்கருத்தரங்கில் ஆரம்ப உரையாற்றிய திரு. வெ சபாநாயகம் மேலும் பேசுகையில் ''கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் இம்முயற்சி பாராட்டுக்குரியது இதுபோன்று ஏனைய கல்வி வட்டாரங்களிலும் இம்மாதிரி பயிற்சிக் கருத்தரங்கு வைத்து ஆசிரியர்களுக்கு பயிற்சியும், உற்சாகமும் கொடுக்கப்பட வேண்டும். இச்கருத்தரங்கில் பங்குகொண்ட ஆசிரியர்கள் தாம் கற்றுக்கொண்டவற்றை வகுப்பறையில் அமுல்நடத்தும் போதுதான் இக்கருத்தரங்கின் வெற்றிப் பரிமாணத்தைக் காணககூடியதாய் இருக்கும்'' என்ருர்.

இக்கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய வட்டாரக் கல்விஅதிகாரி திரு ஆ வ. தங்கராசா, ''இவ்வழகியற் கருத்தரங்கு நல்ல பயனுள்ள முயற்சி இங்கு கோப்பாய் வட்டாரத்தில் உள்ள சகல பாடசாலைகளும் பிரதிநிதித்துவப்பட்டிருப்பது வரவேற்கக் கூடியதாகும்' என்ருர். கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் தமது உரையில் ''ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் முன்னர் கவனிப்பார்இன்றி இருந்தனர் ஆனுல் இபபொழுது அவர்களின் முக்கியத்துவம் நன்கு யாவருக்கும் தெளிவாகத்தெரிகின்றது என்ருர்.

யாழ்ப்பாணம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன் மற்றும் பலரும் பேசினர்.

பங்குபற்றிய அனைவருக்கும் பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் சான்றிதழ்களை வழங்கினுர்.

இதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் கல்விமூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ரி. எஸ் சிதம்பரநாதன் மேற்கொண்டார்.

---

## "பல்கலைக்கழக மாணவர்கள் நூறுவீதம் விளையாட்டுத்துறையில் ஈடுபடவேண்டும்!"

### முன்னுள் நீதியரசர் பேச்சு

[யாழ்ப்பாணம்]

''பல்கலைக் கழக வாழ்வில் ஒவ்வொரு பட்டதாரி மாணவனும் நூறுவீதம் விளையாட்டுத்துறையில் ஈடுபடவேண்டும்'' என்று முன்னுள் யாழ். மேல் நீதிமன்ற நீதியரசர் திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் தெரிவித்தார்.

கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விளையாட்டுப்பிரிவு விருது வழங்கும் வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே திரு. ஆசீர்வாதம் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''பல்கலைக் கழக மாணவர்கள் சமூகத்துக்குக் கூடுதலான பங்களிப்புக்களைச் செய்யவேண்டியவர்களாக உள்ளனர். இதற்குப் பலவகைப்பட்ட அனுபவங்களும் ஆற்றல்களும இன்றியமையாதன.

பாடநூல் அறிவு மட்டும் இன்றைய சமுகத்தின் தேவைகள், அபிலாஷைகளைப் பூர்த்தி செய்துவிடமாட்டா. சகல துறைகளிலும் ஆற்றல்கள், அனுபவங்கள் இதற்குத் தேவையானதாகும்.

இவற்றைப் பட்டப்படிப்பின் பின்பு சமூகத்துக்கு வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் போதுமானளவு கிடைக்கின்றன. இத்தகைய வாய்ப்புக்களை பல்கலைக் கழகங்கள் பெருமளவில் தந்துகொண்டிருக்கின்றதையறியும்போது பெருமை ஏற்படுகின்றது'' என்ருர்.

இவ்வைபவத்தில் துணைவேந்தர் சு. வித்தியானந்தன், விளையாட்டுத்துறை ஆலோசனை சபைத் தலைவர் கலாநிதி விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

திருமதி ஆசீர்பாதம் 1984—85ம் கல்வி ஆண்டுக்கான சிறந்தவிளையாட்டுத் துறை விருதுகளை வழங்கினுர்.

84-85 ம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரராக எம். சி. சேரமான் தெரிவானுர். வீராங்கனையாக கே. ஜயானந்தகுமாரி தெரிவானுர்.

கல்விப் பீடங்களுக்கிடையிலான போட்டியில் கலைப்பீடம் சாம்பியன் பட்டத்தைப் பெற்றது இவை தவிர சகலதுறை விளையாட்டுப் போட்டிகளில் முதன்மை வகித்த பட்டதாரி மாணவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. (கி)

### மணிவாக்கு

நாக்கு ஒரு நெருப்பு அது அக்கிரமங்களெல்லாம் நிறைந்த உலகம்.

— பைபிள்.

## நமது நோக்கு

# புதிய சகாப்தத்துக்கு வழிகாட்டும் வைபவம்

நூற்றைம்பது வருட நிறைவை மிக அமைதியாகவும் அர்த்தமுள்ள முறையிலும் கொண்டாடிய யாழ். மத்திய கல்லூரிக்கு எமது வாழ்த்துக்கள்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்க, வெஸ்லியன், அங்கிளிக்கன் மிஷனரிமார் ஸ்தாபித்த கல்லூரிகளே மிகப் பழமை வாய்ந்தவை.

நாட்டில் விருத்தியடைந்திருக்கும் மற்றைய கல்லூரிகளும் பழமையில் மிஷனரிமார் ஸ்தாபித்த கல்லூரிகளுக்குப் பிந்தியவை.

நாட்டின் பிரபல பௌத்த கல்லூரியான ஆனந்தாக்கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு வருகிற வருடம் என்பதால் மிஷனரிமாரின் தியாகசேவையே பௌத்த, இந்து, முஸ்லிம் கல்லூரிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்ததை விளக்கவேண்டியதில்லை.

இலங்கையின் பிரபல இந்துக்கல்லூரி ஆகிய யாழ். இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு 1990ல் நிறைவுபெறுகின்றது எனவே இக்கல்லூரி 150 ஆண்டுகாலத்துக்கு மேற்பட்ட பிரபல கிறீஸ்துவ கல்லூரிகளின் கல்விச்சேவைக்கு கடமைப்பட்டது.

மிஷனரிமாரின் கல்விச்சேவையே இன்று யாழ்ப்பாணம் தமிழர் சுதந்திரத்துக்குத் தலைமை தாங்கக் காரணமாயிருந்ததென்று கொள்ளுமளவிற்கு பரந்திருக்கிறது.

காரணகாரிய தொடர்பு பகுத்தறிவுள்ளவர்களெவரும் இலகுவில் கண்டுபிடிப்பாரென்று எதிர்பார்ப்பது மடமை

யாழ்ப்பாணம் கல்வியில் பிரகாசித்த காலம் ஒன்று இருந்தது இன்றும் அது மங்கியிருக்கிறதொழிய முற்றாகக் குன்றவில்லை. மீண்டும் முந்திய நிலைக்கு வருவதுமட்டுமல்ல, பயன்தரும் கல்வியில் நாட்டுக்கு வழிகாட்ட முடியுமென்ற நம்பிக்கை கொள்ளவும் நியாயமுண்டு.

எனவே யாழ்ப்பாண இளைஞர் இன்று சுதந்திரத்துக்குப் போராட ஆயுதம் தாங்கிய நிலை தங்களின் உயிர் நிலையத்துக்கு ஆபத்து ஏற்பட்டதாலென அறிக.

நீட்டோலை வாசியான் மரம்' என்று ஒளவைப் பிராட்டி சொன்ன காலம் தொடக்கம், கல்லாதவர் முகத்தில் இருப்பது கண்கள் அல்ல, புண்கள் என்ற தெய்வப் புலமை திருவள்ளுவரின் தமிழ்மறையும் இந் நூற்றாண்டில் மறைந்த மகாகவ… ழை ஒருவனுக்குக் கல்வி புகட்டலைப் போலச் சிறந்த தருமம் வேறெதுவுமில்லை என்று வற்புறுத்தியிருப்பதும் தமிழ் மக்களுக்கு கல்வியில் உண்டான தாகத்தை நிரூபிக்கின்றன.

இதனால் வேறெந்த நாட்டையோ சமூகத்தையோ கீழ் படுத்துவதாகக் கருத இடமில்லை.

கல்வித்தாகங்கொண்ட மக்களுக்கு மிஷனரிமார் அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வியும், பாடசாலை அமைப்பும், மேனாட்டு தனித்துவக்கலையான ஒழுங்குகட்டுப்பாடும், மிஷனரிமாருக்கு இயல்பான தியாக உணர்வும் யாழ்ப்பாணத்தில் கல்விக்கொரு பொற்காலத்தை அமைத்திருந்தது.

150 ஆண்டு நிறைவு விழா கொண்டாடும் மத்திய கல்லூரியும் அதற்கு முன் இவ்வித விழாக் கொண்டாடிய மற்றைய பிரபல கல்லூரிகளும் நாட்டில் மிகப் பிரபலமான திறமைசாலிகளை பல துறைகளிலும் உருவாக்கியுள்ளன.

நாவலர்பெருமானின் புனித சேவைக்கு ஆயத்தகளமாக உதவியது யாழ். மத்திய கல்லூரியும் அவர் கற்ற கல்வி மட்டுமல்ல, அவருக்குக் குருவாகவும் அவரைக் குருவாகவும் ஏற்றுக்கொண்ட பேர்சிவல் பாதிரியார்.

எனவே நாம் வாழும் காலம் வேறுபட்டதாயிருக்கும்போது வேற்று நாகரிகத்தினதும் கல்விமுறையினதும் குறைகளை மறந்து, யாழ்ப்பாணத்துக்கு வரப்பிரசாதமான இக்கலைக் கோயிலையும் அங்கு பணியாற்றிய தியாகச் சுடர்கள் அனைவரையும் போற்றி வாழ்த்துவோமாக.

இன்று தமிழர்களுக்குரிய உயர்ச்சி, அவர்களின் மொழியின்தொன்மைஉலகளாவிய பெருமை போன்ற பாரிய ஆராய்ச்சித் துறைகளில் கிறிஸ்தவ மதத்தவர், ஸ்தாபனத்தவர்கள் அரும்பெரும் சாதனை இயற்றியுள்ளார்.

தேசிய உணர்வில் மதம் தமிழ்மக்கள் மத்தியில் எவ்வித பிரிவினையும் உண்டு பண்ணவில்லை.

இந்த அடிப்படையில் சுய ஆட்சி நடத்த தயாராகும் நாம் இத்தகைய வைபவத்தில் எங்கள் வருங்காலச் சந்ததியினரின் கல்விமுறை எவ்வித மாற்றம் காணவேண்டுமென்பதை சமூக ரீதியில் சிந்திக்கவேண்டும்.

சமயமோ கல்வியோ என்று அக்காலத்தில் பேர்சிவல் பாதிரியார் கேட்டபோது கல்வி என்று விடையளித்த தீர்க்கதரிசிக்கு இன்று பயன்தரும் கல்வி, உழைக்கஉதவும்கல்வி, பற்றி யாழ்ப்பாணத்தவர் சிந்தியாதிருப்பது சிரிப்பாயிருக்கும்.

## கொடியேந்தி வருகின்றாள் கௌமாரி ஜெயதேவி

கொடியேந்தி வருகின்றாள் கௌமாரி ஜெயதேவி
அடி வைத்து வருகின்றாள் கௌமாரி மாகாளி
மிடியற்று மிளிர்கின்ற கன்னாதிட்டிவளர்
வடிவொழுகும் வடிவாளாம் காளியம்பாள்
தொழுவோமே!

— துர்காதாசன்

✶ கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாளுக்கு இன்று முதல் மகோற்சவம் ஆரம்பம். 30-ந் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த, இரு தினங்களும் தீர்த்தமும் பூங்காவனமும் நிகழும்.

✶ உலக மேடை — உலகம் சுற்றி

# உலக விவகாரங்களில் தெய்வீகத்தலையீடு தெரிகிறது?

## வாஷிங்டன்

74 வயதடைந்த ஜனாதிபதி றீகன் திடீரென சுகவீனமுற்று புற்றுநோய்க்கு சத்திரசிகிச்சைபெற்று, மிக விரைவில் குணமடைவதோடு அரச கருமங்களைக் கவனிக்கக் கூடியதாயிருப்பது அமெரிக்க மருத்துவத்தின் அற்புதம் என்றபோதிலும், தேச பரிபாலனத்தைப் பொறுத்தளவில் அது தெய்வாதீனமென்றேகொள்ள வேண்டும் எங்கள் நாட்டுத் தாதிமாரின் திடீர் சுகவீனம் வேறுபட்டது.

உலகின் தலைவிதி அமெரிக்க ஆட்சியில் பெரிதும் தங்கியிருப்பது ஒரு கலை.

நாடு சிறிதென்றாலும் மூர்த்தி பெரிதென்று இலங்கையைக் குறிப்பிடும்போது அமெரிக்கா ஆட்சேபம் தெரிவிக்காது. எனவே இன்று உலகின் மிகச் சிரேட்ட ஜனாதிபதியான இலங்கை ஜனாதிபதி தமது 79 வது வயதில் சுகவீனமுற்றிருந்தது பெருஞ்செய்தியாகவிருந்தது. சுகவீனமென்ற சொல் அவருடைய வாழ்க்கையில் இடம்பெறாததாலேயே இது பிரசித்திபெற்றது ஆனால் நாம் குறிப்பிடும் அபாயம், ஜனாதிபதி றீகனுடையது போன்றது. அவருடைய உயிருக்குஎதிராக நடந்தசதி இது

மேற்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற இத்திடீர் சம்பவங்கள் அந்நாடுகளின் ஆட்சியில் எவ்வித தளம்பத்தையும் ஏற்படுத்தாதது தெய்வாதீனம் என்பதில் என்ன தவறு?

## வெள்ளை மாளிகை

அமெரிக்க ஜனாதிபதியின் அலுவலகம் வெள்ளைமாளிகை என்ற போதும், இத்தகைய நெருக்கடி காலத்தில், அது மருத்துவமனையிட் தற்காலிகமாக நடைபெறுவது, ஒருவிபரீதம்போல் தோன்றும். ஆனால் அமெரிக்க ஜனாதிபதியின் தனித்துவ அதிகாரத்தில் நாளாந்த விவகாரங்கள் பெரிதும் தங்கியிருப்பதால், எந்த நெருக்கடியிலும், உயிருக்கு ஆபத்தானவேளையிலும் ஜனாதிபதியின் ஆளுமை செயலபடும் அவசியம் குறிப்பிடத்தக்கது.

எனவே ஜனாதிபதியின் மனைவி வெள்ளைமாளிகை அலுவல்கள் மட்டுமல்ல, ஜனாதிபதியின் பலவேறு தொடர்புகளிலும் அந்தரங்கமாக ஈடுபடவேண்டிய தேவை உண்டு.

திருமதி நான்சி றீகன், தன் கணவனே தன் உயிரென்று வர்ணித்தபோது, அவருடைய பயங்கர நோயால் எவ்வித தாக்கமுண்டாகாதமாதிரி அவருக்குப் பக்கபலமாக பலகாரியங்களைத் துரிதமாகத் திறமையுடன் கவனித்துவருகிறார்.

## நிக்கரகுவா

இன்று அமெரிக்க ஜனாதிபதிக்கு உடனடித் தலைவலியாகவிருப்பது நிக்கரகுவா மத்திய அமெரிக்க நாடுகள் பொதுவாக அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு அஞ்சிவருகின்றன. அதேசமயம் அமெரிக்க உதவியால் தங்கள் பொருளாதாரம் உயர்ச்சி பெற்று தன்னிறைவு காண முடியுமென்ற நம்பிக்கை கொண்டுள்ளன இதற்கொரு இடிவிழுந்தாற் போல் நிக்கரகுவாவின் இன்றைய நிலை றீகன் ஆட்சிக்கு பெரும்பரீட்சையாக உள்ளது இன்றைய சன்டினிஸ்டா ஆட்சி ஜனநாயக போக்குடையதென்ற கருத்துக் கொண்ட மற்றைய மத்திய அமெரிக்க நாடுகள் இதற்கு ஆதரவாக இருந்தன, ஆனால் இன்றைய நிலையில் மாற்றம் கண்டபோது அந்த ஆதரவு குன்றி வருகிறது

இது கம்மியூனிஸ்ட் ஆட்சி என்று அதனை அகற்ற ஜனாதிபதி றீகன் பலதிட்டங்கள் போட்டு வருகிறார் நேரடி ராணுவதாக்குதல் கூட ஆலோசிக்கப்பட்டு வருவதாகச் செய்தி; இதனை எந்த மத்திய அமெரிக்க நாடும் விரும்பவில்லை. நிக்கரகுவாதாக்கப்பட்டால் மத்திய அமெரிக்கா நாடுகள் அனைத்தும் தாக்கப்பட்டதாகக்கருதி அத்தகைய ஒருபோரில் அமெரிக்கா தோல்வியடையுமென்ற அச்சுறுத்தலும் வெளிவந்திருக்கிறது.

## ஜெனிவா உச்சி

றீகனின் திடீர் சுகவீனம் பற்றி மாஸ்கோ அதிகம் அறியாது; அவர்களின் பத்திரிகை வெளியிட்ட செய்தியில்' மருத்துவ மனையில் பத்திரிகை நிருபர் மாநாடு'' என்ற தலையங்கம் மட்டும் காணப்பட்டது அமெரிக்க அரசியல்முறை வேறுபட்டதால் இச்செய்தி அமெரிக்க பத்திரிகைகளில் பிரபலம் பெறும். எழுத்தாளர் தங்கள் பேனாவின் ஆற்றலை வெளியிட இதுவே தருணமெனக் காத்திருப்பார்கள் ரஷ்யாவில் தலைவர்களின் சுகவீனம் எதுவும் பிரசித்தமாவதில்லை இவ் விடயங்களில் கயிறுதிரிப்புக்கு இடமளிப்பது தவறென அவர்கள் கருதுகிறார்கள்.

## மாஸ்கோ

விடுமுறைக்காலம் தொடங்க அமெரிக்க சட்ட வல்லுநர் சங்கம், மாஸ்கோவிற்கு விஜயம்செய்யத் திட்டமிடுகின்றனர்.

இளந்தலைவர் கொர்பச்சேவுடன் பேசி இவ்விரு நாடுகளின் ஆயுதப்போட்டியைமுற்றாகத் தடைசெய்யும் நோக்கம் நிறைவேற பிரபல அமெரிக்க சட்ட நிபுணர்கள் பலர் கொர்பச்சேவை நேரில் சந்தித்துப் பேசி ஒரு நல்ல முடிவு எடுக்கவும், நாட்டில் சுற்றுலா நடத்தி சோவியத் மக்களின் நட்புறவை வளர்ப்பதில் அக்கறை கொண்டிருக்கின்றனர்.

மாஸ்கோவிலும் அதேகாலம் விடுமுறையாதலால் வருகிற அமெரிக்க விருந்தினரை வரவேற்று உபசரிக்க போதிய ரஷ்யத்தலைவர்கள் மாஸ்கோவில இருப்பார்களா என்ற அச்சம் அதிகாரிகளுக்குவுண்…

எவ்வாறேனும் திட்டமிட்டபடி றீகன் - கொர்பச்சேவ் 'உச்சி' நடைபெறுவதற்கு மருத்துவ மனையிலிருந்தே ஜனாதிபதி றீகன் வேண்டிய ஆயத்தங்களை ஆரம்பித்துவிட்டார்.

இதேசமயம் சோவியத் தலைவர் கொர்பச்சேவ், ''சோவியத் யூனியன் விண்வெளித் தாக்குதல்ஆயுதங்களையோ அல்லது எ. பி. எம். அமைப்புக்களையோவிருத்திசெய்வதில்லை: விண்வெளியை ராணுவ மயமாக்கும் திட்டங்களைக் கைதுறப்பதற்கான இயக்கத்தில் அமெரிக்கத் தலைமையும் எம்முடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென நாம் அறைகூவல் விடுக்கிறோம்'' என்று வற்புறுத்தியிருக்கிறார். இதில் கரிசனையுள்ள விஞ்ஞானச் சங்கத்துக்கு வெளியிட்டிருக்கிறார்.

நூற்றுக்குமேற்பட்ட புகழ் பெற்ற ரஷ்ய விஞ்ஞானிகளையும் கொண்ட இச்சங்கம் அமெரிக்க தேசிய விஞ்ஞானிகள் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வெகுஜன ஸ்தாபனம் இது இந்த ஸ்தாபனம் இதே போன்ற விண்ணப்பத்தை அமெரிக்க ஜனாதிபதி றீகனுக்கு அனுப்பிவைத்துள்ளது.

## ஆப்கான் பிரச்னை

ஆயுதப்போட்டியை நிறுத்த முடிந்தவரை உழைக்க உறுதி கூறிய சோவியத்தலைவர் நவம்பரில் றீகனைச் சந்திக்கும்போது ஆப்கான் பிரச்னையை எவ்வாறு அணுகுவாரென்பதை உலகம் ஆவலுடன்எதிர்பார்க்கிறது ஆசிய அமைதியைக் குலைத்துவரும் அதேசமயம் ஆசிய பாதுகாப்புப் பெருந்திட்டம் ஒன்றை வேண்டி நிற்கும் ஆப்கான் பிரச்னை ஜெனிவாவில் நிச்சயம் முதல் இடம்பெறும்

ஆப்கான் ஆட்சி ரஷ்யாராணுவத்தை வரவழைத்ததா இல்லையாவென்ற வாதம் இன்று தேவையற்றது. ரஷ்ய ராணுவம் எவ்வளவு விரைவில் வீடு திரும்புவதே உண்மையான பிரச்னை

இன்றைய நிலையில் ஆப்கான் ஆசியாவில குறிப்பாக இந்தியாவில் நிகழும் பயங்கரவாதச் செயல்களுக்கு நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக மூன்றாம் பகுதி மூலம் வழி வகுக்கிறதென்றும் இதில் சி. ஐ ஏ போன்ற அமெரிக்க நிறுவனங்களுக்குப் பங்குண்டென்றும் பொது அபிப்பிராயம் வலுப்பெறுகிறது.

போரில், நேரில் முறியடிக்க முடியாத எதிரிகளை அவர்களின் தலைவர் அல்லது அந்நாட்டின கீர்த்திக்குப் பங்கம் விளைவிக்கும் நாசவேலைகளை இத்தகைய நிறுவனங்களில் பொறுப்பித்து விடுவது நியாயமா என்ற விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது

இதற்கிடையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ச்சியாக ஆயுத விற்பனை நடத்தி வருவதை இன்று ஆப்கானிஸ்தான் வலுவாய் கண்டித்திருக்கிறது. இதனைத்தான் இந்தியா என்றும் கண்டித்துவருகிறது. இலங்கை உட்பட ஆசியஅமைதியினத்துக்குக் காரணமான ஆப்கான் பிரச்னை தீருமாயின் ஆசியாவில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலும் அமைதி பலம்பெறும்.

## 'தெற்கு நேட்டோ'

நேட்டோ வட அத்திலாந்தி ஒப்பந்தம்) உலக அமைதிக்கு உதவவில்லை. இன்று அதன் தென்பகுதியென்று வர்ணிக்கப்படும் பகிஸ்தான் ஆசியாவின் முன்னேற்றத்துக்கு தடையாகிறது ஒருகாலம் பாகிஸ்தானின் தலைவராகவும்பின்பு அதிபராகவும்விளங்கிய தூக்கிலிடப்பட்டமுன்னாள்பாகிஸ்தான் ஜனாதிபதி அலி பூட்டோவின் மகன் பிரான்சில் கொலைசெய்யப்பட்டசெய்தி எதனைக்குறிக்கிறது காலம் காட்டும்'

ஏற்கனவே மூன்று யுத்தங்களை பாகிஸ்தான் இந்தியாவுக்

(9-ம் பக்கம் பார்க்க)

# இன்சொல் வாழ்க்கையின் வெற்றிச் சின்னம்

'யாகாவாராயினும் நாகாக்க' என்கிறார் வள்ளுவர். நாம் பேசும் முறையும், எமது சொற்பிரயோகங்களும் எவ்வளவு தூரம் மற்றவர்களைப் பாதிக்கும் என்பதை உணர்ந்தோமானால் எமது பேச்சு வழக்கில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும்.

## பெற்றோரது புறக்கணிப்பு

அந்த ஆறுவயதுச் சிறுவன் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு ஓடி வருகிறான், வீட்டினுள் நுழைந்தவன் உற்சாகத்துடன் ''அம்மா! அம்மா! இதோ இன்று பாடசாலையில் என்ன செய்திருக்கிறேன் பாருங்கள்'' என மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறான்.

அவனது கையில் ஒரு காகிதம். கலர் சோக்கினால் ஏதோ கீறப்பட்டிருக்கிறது அவனது அக்கலைவடிவத்தைப் பெற்றோர் தானே சிலாகிக்க வேண்டும்!

வீட்டை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்த, களைத்த அன்னைக்கு அவன் கூறியது கேட்கவில்லை கேட்பதில் ஆர்வமில்லை.

''இதோ உங்களுக்காக என்ன கொண்டு வந்திருக்கிறேன் பாருங்கள்'' - சிறுவன் கூறிக்கொண்டே, தாயின் கவனத்தை ஈர்ப்பதற்காகச் சேலைத் தலைப்பைப் பிடித்திழுக்கிறான்

'சீ...விடு; நான் கையில் வேலையாயிருப்பது தெரியவில்லையா?'' எனச்சீறி விழுகிறாள் அந்தத்தாய். ''போ போய் அக்காவிடம் காட்டு.''

சிறுவன் உற்சாகமிழந்து தலையைத் தொங்கப் போட்டபடி தளர்நடையாக வெளியேறுகிறான். தாயின் கோபமும் உதாசீனமும் அவனை அதைரியப்படுத்திவிட்டன.

## தன்னம்பிக்கை சிதையக்கூடாது

தனிமனிதனின் யோக்கியதையும் முக்கியத்துவமும் மிகவும் நுட்பமானவை. ஆனால் பலர் இவற்றைக் கவனத்திற்கெடுப்பதில்லை. தன்னல நோக்கத்தைக் கொண்ட மனிதர் நிறைந்த சமுதாயத்திலே மற்றவர்களின் தேவைகள் கவனிக்கப்படாது புறக்கணிக்கப்படுகின்றன. நீங்கள்கூட சில சமயம் மற்றவர்களின் சுடுசொற்களாலும் புறக்கணிப்பாலும் பாதிக்கப்பட்டிருக்கலாம். அல்லது மற்றவர்கள் பாதிப்படையக்கூடிய விதத்தில் நடந்திருக்கலாம்.

தன்னம்பிக்கை ஒரு தடவை உடைந்து போனால் அதனை மீண்டும் கட்டியெழுப்புவது மிகச் சிரமம். நம்மிடையே எத்தனையோ பேர் சிறுவயதில் ஏற்பட்ட தாக்கங்கள் காரணமாக நம்பிக்கையிழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவநம்பிக்கையும் சந்தேக மனப்பாங்கும் வாழ்நாள் முழுவதும் முன்னேற்றப்படிகளுக்கு தடுப்புச் சுவர்களாக அமைந்துவிடுகின்றன.

## தற்கொலைக்கான காரணம்

ஒரு மனிதனின் தகைமையும் யோக்கியதையும் பிற

# போற்றிப் புகழ்வதும் தவறுகளைத் திருத்துவதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

அவனுக்கு தனது திறமை கேள்விக்குறியாகத் தோன்றுகிறது. அவனது தன்னம்பிக்கை சிதறடிக்கப்பட்டுவிட்டது

இவ்வாறு பெற்றோர்களின் கவலையீனமான புறக்கணிப்பும் குரூரமும் சிறுவர்களின் தன்னம்பிக்கை சீர்குலையக் காரணங்களாகிவிடுகின்றன. சுடுசொற்கள் சிறுவர்களை மட்டுமின்றி எவ்வயதினரையும் பாதிக்கின்றன.

## கணவன் எதுவுமே பேசாமல் சாப்பிடுகிறான்

தங்கள் வருமானத்துக்குள் கட்டுபடியாகக் கூடியதாக ஏதோ சில உணவுப்பண்டங்களை வாங்கிவந்து தயாரிக்கிறாள் ஒரு குடும்பத் தலைவி. பகல் சாப்பாட்டுக்கு வெயிலில் களைத்துவரும் கணவன் சாப்பாட்டைக் கண்டு முகம் சுளிக்கிறான். நிலைமையுணர்ந்தவன் என்பதால் எதுவுமே பேசாமல் சாப்பிட்டுவிடுகிறான். அவன் எதுவும் பேசவில்லை என்றாலும் மனைவிக்கு ஒரு ஆதங்கம் தனது முயற்சிகள் அவனால் மதிக்கப்படவில்லை - பாராட்டப்படவில்லை என நினைத்து ஏமாற்றமும் மனவிரக்தியும் கொள்கிறாள். தனது திறமையிலும் ஆற்றலிலும் நம்பிக்கை இழந்துவிடுகிறாள். ''பாடுபட்டு என்ன பலன்?'' என்ற கேள்வி மனதில் தொக்கி நிற்கிறது.

ரால் மதிக்கப்படும்போது அவனது குணநலன்கள் நம்பிக்கையுடன் உருவாகின்றன. இந்த சுபாவம் குறையும்போது மனச்சோர்வும் தாழ்வு மனப்பான்மையும் குடிகொண்டு விடுகின்றன. அவநம்பிக்கையின் உச்சக்கட்டமாக தற்கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## வாழ்க்கையின் வெற்றிக்கு வழி

சிறுவர்களானாலும் சரி, பெரியவர்களானாலும்சரி அவர்களது யோக்கியதை மற்றவர்களால் புரிந்துகொள்ளப்படும்போது அவர்கள் வாழ்க்கையில் வெற்றிகளும் சாதனைகளும் பெருக வழி சமைக்கப்படுகிறது.

தன்னம்பிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தப் பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

ஒரு வகுப்பில் பலதரப்பட்ட மாணவர்களைச் சேர்த்தார்கள். ஆரம்ப தினத்தன்று அம்மாணவர்களைப்பற்றி எதுவுமே அறியாத ஒரு அனுபவமிக்க ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தார். அங்கு குழுமியிருந்த மாணவர்களில் 'பிற்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கக் கூடிய' சில மாணவர்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு அவருக்கு. மாணவர்களை உற்று நோக்கிய அவர், தனது அனுபவ அறிவைக்கொண்டு மானசீகமாகத் தெரிந்தளவில் சில மாணவர்களைப் பொறுக்கியெடுத்தார். அக்கல்வியாண்டின் இறுதியில் அம்மாணவர்கள் உண்மையிலேயே முன்னணியில் திகழ்ந்தார்கள்.

ஆசிரியரின் மதிநுட்பமான தெரிவு ஒருபுறமும், அவரது தெரிவால் அம்மாணவர்களின் மனதில் ஏற்பட்ட நம்பிக்கை ஒளியுமே அவர்களது வெற்றிக்குக் காரணங்களாயின.

## பெற்றோரின் செல்வாக்கும் கடமையும்

சிறுவர்கள் குழந்தைப் பிராயத்திலிருந்தே மற்றவர்கள் தம்மைப்பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள், விமர்சனங்கள் என்பனவற்றின் நோக்கில் தம்மைத் தாமே எடைபோடும் ஒருவழக்கத்தை இயற்கையாகவே கொண்டிருக்கிறார்கள். இந்த சுயமதிப்பீடு பொதுவாக ஒருவரது உருவத்தோற்றம், புத்திக் கூர்மை, விளையாட்டுத் திறமை, கீர்த்தி போன்றவற்றை உள்ளடக்கி நிற்கும்.

தமது பிள்ளையின் மனவளர்ச்சியில் தாங்கள் எவ்வளவு 'தாக்கத்தை' ஏற்படுத்த முடியுமென்பதுபற்றி ஒரு சில பெற்றோரே தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஒரு பிள்ளையின் எண்ணக் கரு வளர்ச்சிக்கு 'தனது பெற்றோர் தன்னை எந்த நிலையில் வைத்து நோக்குகிறார்கள்' என்ற சிந்தனை பெரிதும் தூண்டுதல் அளிக்கிறது சிறுவர்கள் சுலபமாகப் பாதிக்கப்படக்கூடிய மனோநிலையைக் கொண்டவர்கள். அவர்களது மனநம்பிக்கையைக் கட்டியெழுப்புவது இலகுவானது. அதேசமயம் நம்பிக்கையைச் சிதறடிப்பதும் இலகுவானதே என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

## எதிர்க் கருத்துக்களால் தன்னம்பிக்கை குறையலாம்

ஒருவரது தன்னம்பிக்கைப் பயிர் அழிந்துபோக, பெரும்பாலும் வீடுகளிலேயே குழி பறிக்கப்படுகிறது. தன்னம்பிக்கை தகர்த்தெறியப்படப் பல ஏதுக்கள் இருக்கின்றன. புகழ்ச்சியும் ஊக்குவிப்பும் இல்லாத காரணத்தாலும், சொந்தக் குறைபாடுகளாலும், பற்றாக்குறை அல்லது தோல்விகள் என்பனவற்றாலும், மற்றவர்கள் கூறும் எதிர்க் கருத்துக்களாலும் ஒருவருக்குத் தன்னம்பிக்கை குறையலாம்.

ஒரு பிள்ளையின் மனதில் நம்பிக்கையை வளர்க்கப் பெற்றோர் எவ்வாறு உதவலாம்? பிள்ளையின் மனப்போக்கைப் பெற்றோர் கண்காணித்து வர வேண்டும்.

''நான் ஒரு முட்டாள்'', ''என்னால் அந்த வேலையைச் செய்ய இயலாது'', ''என்னை ஒருவரும் விரும்புவதில்லை'' இப்படியெல்லாம் ஒரு பிள்ளை பேசுகின்றானென்றால் அவன் தன் மீது அவநம்பிக்கைகொண்டுள்ளான் என அனுமானித்துக் கொள்ளலாம்.

தன்னம்பிக்கைமிக்க ஒருவன் மிரட்டலுக்கோ, பயமுறுத்தலுக்கோ மசியமாட்டான் அவனைப் பயங்கொள்ளச் செய்ய முடியாது. பெரியவர்களுக்கானாலும் சரி தன்னையொத்த வயதினர்க்கானாலும் சரி சம்பவங்களைத் தெளிவாக எடுத்துக் கூறக்கூடியவனாக இருப்பான். பொதுவாக மகிழ்ச்சி நிரம்பியவனாகவும் துடி துடிப்புள்ளவனாகவும் இருப்பான். புதிய துறைகளில் ஈடுபட ஆர்வம் காட்டுவான்.

## ஊனமுற்றவர்கள் மனோவியல் ரீதியில் பாதிப்பு

சிலருக்கு, தங்களது உருவத்தோற்றம் தன்னம்பிக்கையை இழக்கவும் செய்துவிடுகிறது. அழகுக்கு உயர்ந்த அந்தஸ்துக் கொடுக்கும் ஒரு போலிச் சமூகத்தில் சிறிதளவு ஊனமுற்றவர்கள்கூட மன இயல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். கூடியவரை சுத்தமான, அழகான உடைகளை அணிவிக்கவேண்டும். ஊனங்கள் ஏதுமிருப்பின் அவற்றை அவ்வளவாக வெளியே தெரியாதவாறு

**எஸ். உமாகாந்தன்**

பார்த்துக் கொள்வதோடு அதைச் சுட்டிக்காட்டிப் பேசுதலையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பிள்ளை தனது செய்கைகளை மற்றவர்கள் போற்றிப் புகழவேண்டும் என அடிக்கடி எதிர்பார்க்குமெனனில் அவன் தனது தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்ப மற்றவர்களின் துணையை நாடுகிறான் என்பது அர்த்தம்.

## பிள்ளை வயதில் களங்கம் கூடாது

பல பெற்றோர் தமது பிள்ளைகளின் மனதில் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டிய தன் முக்கியத்துவத்தைப்பற்றி சிந்திப்பதில்லை. பிள்ளையின் மனதில் ஆழமான வடு ஏற்பட்டுவிட்டால் அதனைக் குணப்படுத்தாமல் விடுவது மோசமான பின் விளைவுகளை எதிர்காலத்தில் கொண்டுவரக் கூடும். ''என்னால் இதைச் செய்ய முடியாது, அப்படியிருக்க ஏன் வீணாக முயற்சி செய்ய வேண்டும்?'' என்ற சிந்தனைப் போக்கு நிரந்தரமாகிவிடும்.

## புகழ்ச்சியும் முகஸ்துதியும்

நாம் மற்றவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க உதவ வேண்டும் மற்றவர்களின் திறமைகளை மதிக்க வேண்டும். அவர்களது சாதனைகளைப் புகழ வேண்டும். இந்த இடத்தில் புகழ்ச்சிக்கும் முகஸ்துதிக்கும் நிரம்ப வேறுபாடு இருப்பதையும் குறிப்பிட வேண்டும். புகழ் பாடுபட்டுத் தேடப்படுவது. முகஸ்துதி, திறமையைக் கருத்திற்கொள்ளாது பலனை வேண்டிச் செய்யப்படுவது.

ஒருவர் திறமையைக் காட்டும்போது அதை நாம் பாராட்ட வேண்டும். அத்தகைய பாராட்டுகள் பொதுவாக இல்லாமல் ஒரு குறிப்பிட்ட விடயத்தைச் சுட்டிக்காட்டுவதாய் அமைவது சாலச் சிறந்தது; கூடிய பலனைக் கொடுக்கக் கூடியது. ''இன்று நீ எனக்கு பேருதவியாய் இருந்தாய்'' என்பது தவறல்ல; ஆனால் ''நீ தோட்டத்தை நன்றாக வைத்திருக்கிறாய்'' என்று கூறுவது, அக்குறிப்பிட்ட வேலையை மேலும் உற்சாகமுடன் செய்ய ஊக்கமளிக்கும். மேலும் முன்னேற்றங்களைச் செய்யத் தூண்டும். இவ்வுண்மை எவ்வயதினர்க்கும் பொருத்தமானது.

ஒருவர் ஆற்றும் பணிக்கு மற்றவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும்பட்சத்தில் அது அவரது வாழ்க்கையில் கிடைக்கும் மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது.

## போற்றுவார் போற்றட்டும்! தூற்றுவார் தூற்றட்டும்!

எப்போதுமே மற்றவர்களைப் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்க வேண்டுமெனச் சொல்வது எனது நோக்கமல்ல. ஆனால் போற்றிப் புகழ்தல் ஒருவனது தன்னம்பிக்கை வளர உதவுமென்பதையே வலியுறுத்துகிறேன்.

ஒருவரை நீங்கள் புகழும்போது அவருக்கு, 'தான் அப்புகழ்ச்சிக்குத் தகுதியுடையவனாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது தன்னைப்பற்றிய பிறரின் கணிப்புத் தவறிவிடக்கூடாதென்பதால் அவர் தனது திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள முற்படுவார் மேலும் வளர்ச்சிகாண முடியாதவிடத்தும், தற்போதைய நிலையையாவது தொடர்ந்துபேண முயற்சிசெய்வார்.

போற்றிப் புகழவேண்டும் என்பதற்காக ஒருவர் தவறு செய்யுமிடத்து அதனைக் கண்டு கொள்ளாமல் விடவேண்டும் என்பதில்லை. தக்க சமயத்தில் தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்தவேண்டும் குறிப்பாக, சிறு பிள்ளைகள் தவறுசெய்யும் போது பக்குவமாகச் சொல்லித் திருத்தவேண்டும். சிறுவயதிலிருந்தே அவர்களுக்கு 'தவறானவை எவை' என இனங்காட்டிவிடவேண்டும்.

## மிகுதிக்கண் மேற்சென்றிடித்தலே நட்பு

போற்றிப்புகழ்வதும், தவறுகளைத் திருத்துவதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே. தனது நற்செய்கைகளுக்குப் பாராட்டுப பெறும் ஒரு குழந்தை தனது தவறு சுட்டிக் காட்டப்படும்போது அதனை இயல்பாக எடுத்துக்கொண்டு திருத்துவதில் ஆர்வம் காட்டும்.

## குற்றம் நீ குணங்கள் நீ

''மன விசாரமானது ஒருவனது இதயத்தைப் பலஹீனப் படுத்துகிறது ஆனால் ஒரு நல்ல சொல் அதனை மகிழ்ச்சியடையச் செய்கிறது''.

மேலைநாடுகளில் 'நன்றி', 'நீ இன்று அழகாகத் தோற்றமளிக்கிறாய்', 'உன்னைச் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகின்றேன்' என்பன போன்ற பதங்கள் அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகின்றன.

## கனியிருக்கக் காய்கவர்தல் முறையோ?

நாமும் மற்றவர்களை மகிழ்ச்சியடையச் செய்து அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கக்கூடிய சொற்களை அடிக்கடி பயன்படுத்துவோமாக.

# விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதாரத்தில்

# இந்தியா தனித்துவத்தை பேணுதல் சாலுமா?

இணுவில் ஆர். எம். கிருபாகரன்

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் ஒரே நாடாய் இருந்த இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என்பவற்றின் வளங்கள் நாலுதிசையிலும் சுரண்டப்பட்டது. காலனித்துவ ஆட்சி எனும் பேரால் பெரும் மோசடி நடப்பதையறிந்த சுதேச மக்கள் செய்வதறியாது கைபிசைந்து நின்றதையே காணக்கூடியதாயிருந்தது ஆனால் உள்ளூர் மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வி, நாகரிகம் என்பன வளர்க்கப்படாமலில்லை. எனினும் ஆசை காட்டி மோசம் செய்ததாக மேற்கூறியவற்றை அறிமுகப்படுத்தி நாட்டின் வளத்தை தங்கப்பாளமாக லண்டனுக்கு கப்பலேற்றுவதிலேயே அன்றைய பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல்கள் அதிக சிரத்தை காட்டினர். அன்றெல்லாம் தொழில் துறையும், தொழினுட்பமும் நன்கு வளர்க்கப்பட்டது: ஆனால் அதன் வளத்தை இந்தியமக்கள் அனுபவிக்க வாய்ப்பிருக்கவில்லை.

## இந்தியாவின் சுயதொழில் நுட்பம்

1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபின்னர்தான் தன் சொந்தக்காலில் நின்று தொழில்நுட்பத் துறையிலும் சரி, மற்றெல்லாத்துறையிலும் சரி முன்னேறும் பலத்தையும், வளத்தையும் பெற்றது, பிரித்தானியர் விட்டுச்சென்ற தொழிற்சாலைகளை தொடர்ந்து நடத்துவதில் ஆரம்பித்து பின்பு சுயமாகவே தொழில் நுட்பங்களையும் புதிய கண்டுபிடிப்புகளையும் அறிமுகப்படுத்தும் அளவுக்கு பாரததொழினுட்பம் வளர்ந்து வருகிறது. ஆரம்பத்தில் நேரு பிரதமராக இருந்த காலத்தில் பெரும்பாலான தொழிற்துறைகள் அரசாங்கத்தால நடாத்தப்பட்டவையாகவே இருந்தன. இப்போதுள்ள அளவுக்கு தனியாரின் கை அப்போது உயர்ந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பல காரணங்கள் அவ்வப்போது தொழிநுட்ப வல்லுனர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

## தனியார்துறை

1956ம் ஆண்டுக்குப் பின்னர்தான் தனியார்துறையினர் பெருமளவில் தோன்றி பாரதத்தில் தொழில் யுகத்தைத் தோற்றுவித்தனர். 1947முதல் 1956 வரை அரசினால் எல்லாத் துறைகளிலும் இறங்கவோ, முதலீடு செய்யவோ துணிவு வரவில்லைப்போலும். ஆனால் அக்கால கட்டத்தில் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தது. எப்போது வங்கிகள் ஏராளமாக்கப்பட்டு உள்ளூர் கடன்கள் தாராளமாக வழங்கப்பட்டதோ அன்று ஆரம்பித்த தொழில்துறை, விவசாயத்துறை வளர்ச்சிகள் உயர்ந்த வண்ணமேயிருக்கின்றதை இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

## பிரித்தானியச் சுரண்டல்

பிரித்தானிய ஆட்சியிலே ஏகநாடாய் இன்றைய இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் இருந்தபோது ஏக நாட்டின் தொழில், தொழில்நுட்ப வளர்ச்சி 0.7% முதல் 1.75% வரையே இருந்தது. அதற்கு மேல் வளர்ச்சியுறமுடியாமற்போய்விட்டது- ஆனால் சமீபத்திய, சர்வதேசதொழில் நுணுக்கசபையின் ஆய்வு அறிக்கைகளைப் பார்க்கும் போது 1983/84ம் ஆண்டுகளில் இந்தியா 18.8% உம், பாகிஸ்தான் 10 4% உம், பங்களாதேஷ் 10% உம் தொழில்நுட்ப முன்னேற்றம் கண்டுள்ளதை அவதானிக்கத் தக்கதாயுள்ளது.

## நவீனரக யந்திரம் கருவி உற்பத்தி

20ம் நூற்றாண்டு விஞ்ஞான யுகத்தில் இந்தியாவுக்கு என்னென்ன தொழில்வளர்ச்சிகள், தொழில் நுட்பங்கள் தேவையோ அவற்றின் பெரும்பகுதியை சுயமாகத் தன்னிறைவு செய்யும் அளவுக்குமுன்னேற்றம் கண்டு வருகிறது, மீதியான சிறு பகுதிக்கு மட்டுமே அது வெளிநாட்டு உதவியையும், தொழில்நுட்பஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறது. இவ்விஞ்ஞான யுகத்தில் எந்தெந்தத் துறைகளில் நவீனரக யந்திரங்கள் கருவிகள் உண்டோ அவையெல்லாம் இன்று இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன குறிப்பாக ஒலிபரப்புக் கருவிகள், தொலைக்காட்சி அஞ்சல் கருவிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள். மோட்டார் வாகனங்கள். கப்பல் கட்டுதல், சிறு விமானங்களின் தயாரிப்பு, இராட்சத ஆலைகள், புகைவண்டிஎன்ஜின்கள்-பெட்டிகள், இராணுவத்தளபாடங்கள், மின்னணுக் கருவிகள் இப்படி ஏராளமானவைகளை இந்தியாவிலேயே தயாரிக்கிறார்கள், பாரதவிஞ்ஞான. தொழில் நுணுக்க வல்லுனர்களின் அயராத முயற்சியினால் புதிய கண்டு பிடிப்புகளும், புதிய ரகங்களிலும் இயந்திர சாதனங்கள் அறிமுகமாகிக் கொண்டே வருகிறது.

## சுயவாற்றல் பிரயோகம்

பாரதவிஞ்ஞானிகள். தொழில்நுட்ப வல்லுனர்கள் மேற்கத்திய நாடுகளுக்கு மேலதிக பயிற்சிக்காக அனுப்பிப் பயிற்றுவிக்கப் பட்டாலும், தம் சுயஆற்றலையும்- வலிமையையும் மூலதனமாகக் கொண்டு முன்னேறி நவீன உலகில் வெற்றிநடை போடுகின்றனர்.

இந்தியாவில் சீமெந்து, மின்சாரம், சர்க்கரை, காகிதம் போன்ற முக்கிய பொருட்கள் பெரும் இராட்சத ஆலைகள் மூலமே உறபத்தி செய்யப்படுகின்றன. இதற்கான முதலீடுகளும் பல்லாயிரம் கோடி ரூபாய். இவற்றின் உற்பத்தியையும் வருடாவருடம் தேவைக்கேற்ப அதிகரிக்க பெரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பல்லாயிரம் தொழிலாளர்களுக்கும் இவற்றில் வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. பாரததொழிற்துறைச் சஞ்சிகை ஒன்றின் தகவலின்படி இந்தியத் தொழில்நுட்ப ஊழியர்களில் 11% பேர் பாரிய தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். மற்றும் இதரதொழிலகங்களில் 43 4% தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். மீதி 45.6% பேர் சிறுகைத்தொழில் துறைகளில் உள்ளனர். இந்தியத்தயாரிப்பு துணி, புடவை வகைகளுக்கு எப்போதுமே உலகச்சந்தையில் ஓர் தனிமவுசு காணப்படுவதை அனைவரும் அறிவர். ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளுக்கு துணிவகை ஏற்றுமதி மூலம் ஆண்டொன்றுக்கு பாரதம் சுமார் 1200 கோடி ரூபாவுக்கு மேல் அந்நியச் செலவாணியாகப் பெறுகிறது. சீனாவின் அபரிமிதமுணி உற்பத்தி, ஜப்பானின் நவீனரக துணி உற்பத்தி போன்ற போட்டி உற்பத்திகளையும் மீறி இந்தியத்தரமும் ஏற்றுமதியும் உள்ளது. இது கடந்த நான்கு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்துவரும் ஓர் சாதனையாகும். கடந்த சில வருடகாலத்துக்குள் ஏற்பட்ட உற்பத்திப் புரட்சியும், தொழிற்சாலைகள் நவீனமயப் படுத்தலினதும் விளைவே இது போன்ற ஏற்றுமதி உயர்வாகும்.

## தமிழ்நாடு அரசின் பணிகள்

பாரத மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையிலே அனல்மின்சாரம். புனல் மின்சாரம், அணுமின்சாரம் ஆகிய உற்பத்திகள் மூன்றிலும் நவீன முறைகளுக்கு புதிய மெருகூட்டி தன் தனி ஆற்றலை வெளிப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் கடல்அலைகளிலிருந்தும், சாணஎரிவாயுவிலிருந்தும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை இந்திய மின் உற்பத்தி அமைச்சு துரிதப்படுத்தி வருகிறது. மேற்கூறிய இரு புதிய முறை மின்சார உற்பத்திக்கு முன்னேற்பாடாக தூத்துக்குடியில் கடல்அலை மின்நிலையமும், வடஆற்காடு மாவட்டத்தில் சாணஎரிவாயு மின்நிலையமும் அமைப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி ஆரின் அரசு துரித நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. சமீபகாலத்தில் மற்றைய மின் உற்பத்திகளைவிட அணுமின்சார உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி வருவதை உணரக் கூடியதாயுள்ளது. மொத்தம் ஐந்து பெரிய அணுமின்சார நிலையங்கள் இந்தியாவில் உள்ளன இதில் தமிழ்நாட்டிலுள்ள கல்பாக்கம் அணுமின்சார நிலையம் இந்திய விஞ்ஞான வளர்ச்சியில் ஓர் மைல் கல் என்றால் மிகையாகாது 1866-ம் ஆண்டு கட்டுமானப் பணிகள் தொடங்கிய இந்த நிலையம் 1983 யூன் மாதம் தான் தனது மின்சார உற்பத்தியை ஆரம்பித்தது. முழுக்க முழுக்க இந்திய விஞ்ஞான, பொறியியலாளர், தொழில் வல்லுனர்களின் ஆலோசனைப்படி வடிவமைத்து நிர்மானிக்கப்பட்ட நிலையம் இது. துளியளவு கூட வெளிநாட்டு மூளைவளமோ, முலவளமோ, உதவியோ இன்றி அமைக்கப்பட்ட "தனி இந்தியத் தயாரிப்பு" எனலாம். கிட்டத்தட்ட 17 வருடங்களாக அமைக்கப்பட்ட நிலையமானாலும் இந்திய விஞ்ஞானிகளின் ஆற்றலுக்கு ஓர் நற்சான்றிதழ் வழங்கவே கூடிய கட்டம் இது. தமிழ்நாட்டின்

## மின் உற்பத்தி

மின்சார உற்பத்தி தேவையில் 12% ஐ இந்நிலைய முதற்கட்டம் பூர்த்திசெய்கிறது. மீதி மின்சாரம் ஆந்திராவின் ராமகுண்டம் அணு உபமின் நிலையத்துக்குச் செல்கிறது. இந்த கல்பாக்கம் நிலையத்தின் 3 கட்டங்களும் முழு அளவில் மின்காரத்தை உற்பத்தி செய்யத் தொடங்கினால் தமிழகத்தின் மின்உற்பத்தித் தேவை 38% ஐ பூர்த்திசெய்யும். இதற்கு இன்னும் 8 வருடங்களாவது ஆகலாம். சுமார் 1327 கோடி ரூபா செலவில் தயாரான இந்நிலையம் 920 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனுடையது.

## ஆரியபாட்டா அனுராதா பாஸ்கரா

இந்திய விஞ்ஞானிகளின் ஒப்பற்ற திறமைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு, இந்திய விண்வெளி ஆராய்ச்சிகள் 1975-ம் ஆண்டு இந்திராகாந்தியின் ஆட்சியிலே முடுக்கிவிடப்பட்ட இந்திய விண்வெளி ஆராய்ச்சிகள் தொடர்ந்து ஆண்டுக்கு ஆண்டு சாதனைகளைப் படைத்த வண்ணமேயுள்ளது. ஆரிய பாட்டா, பாஸ்கரா, அனுராதா போன்ற இந்தியச் செயற்கைக் கோள்கள் அண்டவெளியில் நிகழ்த்திய ஆய்வுகள் உலக அரங்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் விண்வெளிக்கு அனுப்பிய உபகோள்களுக்கு ஈடிணையாக இந்தியாவும் செயற்கைக் கோள் அனுப்பி ஆய்வுசெய்வது இந்தியாவின் தரத்தை அகியுன்னத நிலைக்கு உயர்த்தியது அதுவும் முழுக்க முழுக்க இந்திய விஞ்ஞானிகளின் ஆலோசனைப்படி இந்த கோள்கள் (விண்கலங்கள்) வடிவமைக்கப்பட்டவை. உலக விண்மண்டல ஆய்வுச்சபையில் இன்று இந்தியாவும் முக்கிய உறுப்பினராகப் பங்காற்றி வருகிறது தற்போது தொலைகாட்சி அஞ்சல், தொலைபேசி பரிவர்த்தனை, வானொலி அஞ்சல் போன்றனவும் இந்த செயற்கைக் கோள்கள் மூலம் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

## இந்திய, சீன விவகாரம்

இந்தியாவின் இந்த அளப்பரிய விஞ்ஞான அண்டவெளிச் சாதனைகள் கண்டு அயலிலுள்ள போட்டி நாடான சீனா மனம்குமுறுகிறது சீன அரசும் இதுபோன்ற விண்வெளி ஆய்வுகளில் மேலும் இனியாவது ஈடுபடவேண்டுமென பீக்கிங் அரசியற் பிரமுகர்கள் கருதுவதாகத்தெரிகிறது. இதுபற்றிய வாதப்பிரதிவாதங்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற் குழுக் கூட்டங்களில் பெரும் சாச்சையையும் கொந்தளிப்புகளையும் ஏற்படுத்தியது இவை பற்றிய செய்திகளை சீன அரசு வெளியே வராமல் தணிக்கை செய்துவிட்டது.

இரயில்பெட்டி உற்பத்தியிலும் பாரதத்தின் முன்னேற்றத்தையும் பங்கையும் நாம் புறக்கணித்து விடமுடியாது ஹங்கேரி, ருமேனியா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா போன்ற நாடுகளின் இரயில் பெட்டி ஏற்றுமதியோடு போட்டி போடுமளவுக்கு இந்திய இரயில் பெட்டி உற்பத்தியும் தரமும் உயர்ந்துள்ளது. சில ஆண்டுக்கு முன் மேற்சொன்ன நாடுகள் மட்டுமே இரயில் பெட்டி உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் முன்னணியில் நின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் இரு பெரும் தொழிற்சாலைகளில் இரயில் பெட்டிகள் உற்பத்தியாகின்றன இதில் ஒன்று தமிழ்நாட்டில் பெரம்பூரிலே உள்ளது. அண்மையில் உகண்டா, சாம்பியா, நைஜீரியா போன்ற நாடுகளுக்கு, இரயில் பெட்டி ஏற்றுமதிக்கான பெரிய "ஓடர்" இந்த பெரம்பூர் தொழிற்சாலைக்குக் கிடைத்துள்ளது இதன் மூலம் அடுத்தாண்டுக்குள் சுமார் 330 கோடி ரூபாய் அந்நிய செலாவணி கிடடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த "ஓடர்" ஐப்பெற ஏனைய போட்டி நாடுகள் பெரிய பிரயத்தனம் எடுத்தும் முடியாமற்போய்விட்டது.

மின் அணுத்துறையில் இந்தியா குறுகிய கால எல்லைக்குள் அதிக முன்னேற்றம் கண்டுள்ளதை அதன் ஏற்றுமதி நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. குறிப்பாக கணனி, கம்பியூட்டர் உற்பத்தியில் அதிக ஆற்றலை இந்தியா பெற்றுள்ளது. சோவியத் ரஷ்யாவுடனான இந்திய பண்டமாற்று ஒப்பந்தத்தின்படி பல கோடி ரூபா பெறுமதியான கணனிகள், கம்பியூட்டர்கள், மின்னணுக் கடிகாரங்கள் ஏற்றுமதியாகின்றன. இவை ஒப்பந்த அடிப்படையில் ஆயினும் உற்பத்தி ஆற்றலைப் பொறுத்தவரை நன்கு முன்னேறிய தன்மையை வெளிபடுத்துகிறது. மேற்கூறிய மின்னணுப் பொருட்களின் பாவனை இந்தியாவில் குறிப்பிடத் தக்களவு இன்னும் அபிவிருத்தியடையவில்லை. எனினும் ஏற்றுமதித் தரத்தைப் பொறுத்தவரை மேலைத்தேய நாடுகளுடன் போட்டி போடுவது விந்தையே. யப்பானுடன் கூட்டுத் தயாரிப்பாக இந்தியாவில் மின்னணு, இலத்திரனியல் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

## நவீனமயம் துரிதம்

இதுவரை காலமும் இந்தியா இராணுவத்துக்கான தளபாடங்களை பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்டே வந்தது. ஆனால் சமீபகாலமாக உள்நாட்டிலே பெரும்பாலான தளபாடங்களை உற்பத்தி செய்து வருகிறது குறிப்பாக விஜயானந்சரக, அர்ஜன்ரக யுத்த தாங்கிகள், யுதக்கப்பல்கள், பீரங்கி படகுகள். துப்பாக்கிகள் போன்றன அபரிமிதமான அளவில் தயாரிக்கப்படுகிறது. இந்திய இராணுவத்தை மேலும் நவீனமயமாக்கலின் முன்னோடியாக இது துரிதமாக்கப்பட்டுள்ளது. இந்தியா ஏதோ ஒரு புதிய துறையில் ஒவ்வோர் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவண்ணமேயுள்ளது. கடந்த வருடம் நவம்பரில் புதிய பிரதமராய் திரு ரஜீவ் காந்தி பொறுப்பேற்றபின் இந்தியாவின் தொழிநுட்ப விஞ்ஞானத்துறை மேலும் நவீனமயப்படுத்தப்பட்டு வருகிறது என பாரத தொழில் நுட்ப ஆய்வாளர்கள் பொதுக்கருத்து வெளியிட்டுள்ளனர் மேற்குலகநாடுகளின உதவியேடும் ஒத்துழைப்போடும் சகலதுறைகளிலும் வளமும், ஆற்றலும் மிகக பாரதத்தைகட்டியெழுப்புவதே புதிய பிரதமரின் கனவாகும். கடந்த மாதம் திரு. ராஜீவ் காந்தியின் மேற்குலகப் பயணங்கள் இத்திட்டத்திற்கு கட்டியம் கூறி நிற்கின்றன.

[7-ம் பக்கம் பார்க்க]

# 'விளையாட்டுக்கள் மாணவரின் ஆற்றலை வளர்க்கின்றன'

(சுண்டிக்குளி)

தற்போதைய நிலையில் நம் நாட்டுப்பிள்ளைகள் கல்வியைச் சிறந்த முறையில் கற்று ஜப்பான் தேசத்தவர்களைப் போன்ற மூளைசாலிகளாகத் திகழ்ந்து இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும் என்று ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்சயன் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு அ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு தனஞ்சயன் தொடர்ந்து பேசுகையில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதன் மூலம் பிள்ளைகளின் ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிப்படுத்தி அவர்களைச் சிறந்த வீரர்களாக உருவாக்க முடியுமென்றும், நல்லொழுக்கத்தையும் மனோவலிமையையும் பெற முடியுமென்றும் குறிப்பிட்டார்.

இப்போட்டியில் சோழன் இல்லம் 249 புள்ளிகளையும் சேரன் இல்லம் 209 புள்ளிகளையும். பண்டியன் இல்லம் 190 புள்ளிகளையும் பெற்றன.

## விஞ்ஞான...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

### இந்திய சோவியத் நட்பு

குறிப்பாக இந்தியாவின் நீண்டகால நண்பனும், ஆபத்து வேளைகளில் உதவிய நாடுமான சோவியத் ரஷ்யாவின் தொழில்நுட்ப உதவிகளை அது எதிர்பார்க்கிறது. ஏற்கெனவே நல்ல நிலையிலுள்ள பாரத - சோவியத் உறவுகளில் மேலும் சிறப்பான இடம்பெற இது உதவலாம். இந்திய - ரஷ்ய விஞ்ஞானப் பிரதிநிதிகள் பரஸ்பரம் சந்தித்து இவ்விரு நாடுகளிலும் ஆலோசனைகள் வழங்குவார்கள்.

### பிரான்ஸ் அமெரிக்க உதவிகள்

பிரான்சும் தன் உதவிகளை இந்தியாவுக்கு வழங்க முன்வந்துள்ளது நீர்ப்பாசனம், தொலைபேசி, விமானவியல் ஆகிய துறைகளில் ஆலோசனைகள், உதவிகள் வழங்க பிரெஞ்சுக் குழுவொன்று இவ்வாண்டுக்குள் இந்தியா வரவுள்ளது இந்தியப் பிரதமரும், அமெரிக்க ஜனாதிபதி திரு. றீகனும் சந்தித்ததன் எதிரொலியாக அமெரிக்காவும் இந்தியாவுக்கு தன் விஞ்ஞான, தொழில்நுட்ப உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. இது கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டாலும் நடைமுறைச் சாத்தியம் இருப்பின் இந்தியா வெகு விரைவில் விஞ்ஞான யுகத்தின்

### அணிசேராமையும் வல்லரசாதிக்கமும்

எல்லைக்கே போய்விடும். அணிசேரா நாடுகளின் தலைமை நாடான இந்தியாவுக்கு வல்லரசுகளான சோவியத்தும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு உதவிபுரிய முன்வந்துள்ளன. இது ஒருவகையில் இந்தியாவுக்கே பெரும் நன்மையாக அமையும். ஏனெனில் மேற்கூறிய உதவிகளால் முழுப் பயனையும் அடையப்போவது இந்தியாதான். ஏனைய அணிசேரா நாடுகளுக்கும் இந்தியா தான் உதவி செய்யக்கூடிய வல்லமையைப்பெற வாய்ப்புண்டு. உதாரணமாக ஆபிரிக்காவின் வறிய நாடுகள் பல மேற்கு, ஐரோப்பிய நாடுகளைவிட ஆசிய நாடுகளிடம் உதவி பெறுவதையே அதிகம் விரும்புபவை. அத்தோடு இவைகளுக்கு உதவிசெய்வதை இந்தியா

### இந்தியாவின் இராணுவ மேலாண்மை

வும் விரும்புகிறது. உலக இராணுவ மேலாண்மையில் ஆறுவது வல்லரசு எனப்படும் இந்தியா, கூடிய விரைவில் தன் சுய ஆற்றலினாலும் வல்லமையினாலும் உலகில் மேலும் ஓர் உன்னத நிலைக்கு வந்துவிடும் என்பதுமட்டும் வெளிப்படை. அவ்வளவுக்குப் பாரதத்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார நடவடிக்கைகள் சமீப காலத்தில் இடம் பெற்றுவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

## அப்புறப்படுத்த நடவடிக்கை

[வவனியா]

வவனியாநகர கடை வீதிக்குள் நகரசபையின் அனுமதியின்றி போடப்பட்டுள்ள தற்காலிக, நிரந்தர கடைகளை அவ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக பள்ளிவாசல் அருகாமையுள்ள பகுதிகளிலும் மற்றும் நகரின் பிரதான வீதிகளிலும் இப்படியான கடைகள் உள்ள விடயம் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரி ஒருவருடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## பதவி வெற்றிடம்

பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஆறுமாத காலமாக விளையாட்டு அதிகாரி பதவி வெற்றிடமாக இருந்துவருகிறது.

இப் பிரிவில் விளையாட்டு அதிகாரியாகக் கடமையாற்றிய திரு இ சுப்பிரமணியம் கடந்த ஜனவரியில் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து இவரின் இடத்திற்கு எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் இப்பகுதி விளையாட்டுக் கழகங்களிடையே அதிருப்தி நிலவுகின்றது. (க)

# கைலாசபதி கலை அரங்கில் 'உறவுகளின் ராகங்கள்'

[கல்வியங்காடு]

''உறவுகளின் இராகங்கள்'' நூல் வெளியீட்டு விழா இம் மாதம் 24-ம் திகதி புதன் கிழமை மாலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

விழாவை மங்கள விளக்கேற்றி யாழ்.ஆயர் அதி வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, யாழ் அ ம தி. சபை முதல்வர் அதி வண. லூயி பொன்னையா, யாழ். பல்கலைக் கழக உப வேந்தர் சு. வித்தியானந்தன் ஆகியோர் ஆரம்பித்து வைப்பார்கள்.

ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் சபா ஜெயராசா, விமர்சக உரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலை விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு நிகழ்த்துவார். பதிலுரையை 'உறவுகளின் இராகங்கள்'' நூலாசிரியர் வண. வின்சன்ற் பற்றிக் ஆற்றுவார். இந்நூல் 'நான்' குழுவினரின் வெளியீடாகும்.

## ஊர்காவல்படை வீரரொருவர்

# தனது துப்பாக்கி வெடித்துப் பலியானார்

(வவனியா)

வனியாவில் பெரிய உளுக்குளம் என்ற இடத்தில் ஊர்காவல்படை வீரர் ஒருவர் பன்றிவேட்டையில் தான் வைத்திருந்த துப்பாக்கி வெடித்துப் பலியானார்.

இச்சம்பவம் கடந்த 17ம் திகதிஇடம்பெற்றது தர்மபால பண்டார (23 என்பவரே இவ்வாறு பலியானவராவர்.

மேற்படிதினத்தில் அதிகாலை இவர் வேட்டைக்கு சென்றதாகவும் அங்கு ஒரு பன்றியை சுட்டபின்னர் குற்றுயிராய்க் கிடந்த பன்றியை துப்பாக்கியின் அடிப்பகுதியினால் அடித்து கொல்லமுற்பட்டபோது ஏற்கனவே அதற்குள் போடப்பட்டிருந்த குண்டினால் துப்பாக்கி வெடித்து அந்த இடத்திலேயே அவர் பலியானதாக கூறப்படுகிறது.

அடுத்தநாள் இவரதுசடலம் கண்டுபிடிக்கப்பட்டு வவனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும், பின்னர் அங்கிருந்து பிரேதபரிசோதனைக்கு அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## சமாதான

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு பி. சுப்பையா உபதலைவர்; திரு. வி. எஸ். கந்தையா, செயலாளர்: திரு. எஸ் சிவராஜ ஐயர், உபசெயலாளர்: திரு எஸ் நாகராஜா, மற்றும் செல்வி: சிவமணி அம்பலவாணர் திருவாளர்கள்; த. பவளகேசன், க. தம்பிராசா, செ தம்பிராசா, க. தம்பிராசா, வ ஜெகராசா, மு கந்தப்பிள்ளை, வே ஐயாத்துரை. எஸ் கே தம்பிராசா. மா. கிருஷ்ணன், எஸ். ஆர் பொன்னம்பலம், வி. சுப்பிரமணியம் ஆகியோர் நிர்வாக உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மீண்டும் ஆடிவேல்

(கொழும்பு)

இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் இம்முறை மீண்டும் ஆடிவேல் விழா கொண்டாடப்படவுள்ளது.

சம்மாங்கோட்டார் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் 28-ம் திகதி ஆடிவேல்உற்சவம் ஆரம்பமாகும் 29-ம் திகதி காலை தங்கரதபவனி வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலயத்தை சென்றடையும், 30-ம், 31-ம் திகதிகளில் அங்கிருந்து விட்டு அகஸ்ட் 1-ம் திகதி வெள்ளவத்தையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை சம்மாங்கோட்டார் கோயிலை சென்றடையும்.

செட்டித்தெரு பழைய கதிர்வேலாயுத சுவாமியின் தங்கரதம் 30-ம் திகதி வெள்ளவத்தையிலிருந்து புறப்பட்டு ஜனாதிபதிமாளிகை அலரிமாளிகை ஊடாக ஆகஸ்ட் 2-ம் திகதி அதே வழியாக கோயில் வந்தடையும்

## நிர்வாகிகள்

(வேலணை)

சங்கானை சைவப்பிரகாச வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் சல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் நடப்பாண்டு நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு மு. க. சிவபாதலிங்கம் (அதிபர்) இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் ச. கந்தசாமி. எஸ். ஞானகனேசன் தனாதிகாரி திரு கே உபேந்திரன் மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

0 0 0

[வேலணை]

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய உயர்தர கலை, வர்த்தக மாணவர்களால், கலை வர்த்தக மாணவர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவர்: செல்வன் எஸ். வசந்தன், உபதலைவர்: செல்வன் எஸ் மகேந்திரராசா, செயலாளர்: செல்வி நகுலேஸ்வரி செல்லையா, உபசெயலாளர்: செல்வன் பா. சோமஸ்கந்தன், தனாதிகாரி: செல்வன் பா. மதிகரன் மற்றும் 7 பேர்கள் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது

0 0 0

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் - தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு உட்பட உடுவிலில் 56 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய கிராமியக் குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது இதன் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. வி பூலோகராசா, செயலாளர்:- திரு. த கணபதிப்பிள்ளை. பொருளாளர்:- திரு சி கணேசன், மற்றும் 12 பேர் கொண்ட உப குழுவும் நியமிக்கப்பட்டது.

இக்கிராமியக் குழு மூலம் இப்பகுதியில் அண்மைக்காலத்தில் சுமார் 55 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

# அருள் வழங்கும் உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி

யாழ்ப்பாணப் பெரும் பகுதியிலே வேலாயுதத்தை மூல மூர்த்தியாகக் கொண்டுள்ள நல்லூர்க் கந்தசுவாமிகோவில் செல்வச்சந்நிதி முருகன் கோவில் போன்ற ஒரு சில விரல் விட்டு எண்ணத்தகும் ஆலயங்களில் உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணிய கோவிலும் ஒன்றாகும் சரித்திரப் பழமை வாய்ந்த இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் இடித்து அழிக்கப்பட்டமைக்கு பல சான்றுகள் உண்டு பற்றையும் செடியுமாய் இருந்த இவ்வாலயம் 1953-ம் ஆண்டிலே புதுப்பிக்கப்பெற்று கும்பாபிடேகம் செய்யப்பட்டது.

1958-ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக முருகபக்தர்கள் இலங்கையின் தென்கோடியிலே கோயில் கொண்ட கதிர்காமக் கந்தனைத் தரிசிக்க அவன் பொன்னார் திருவடிகளை வழிபடு செய்ய, அவன் பெருவிழாக்களைக் காண இயலாது தவித்தனர். அடியார்களின் உள்ளக் குறையைப் போக்க வேண்டியோ என்னவோ குமாரப் பெருமான் கதிர்காமத்தை விட்டு நீங்கி உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியர் தேவஸ்தானத்திலே கோயில் கொண்டானோ என எண்ணும் அளவுக்குக் கதிர்காம உற்சவம் இங்கே எடுக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கள் கோவிலிலே கூடினர் இவர்களெல்லாம் தம்மைப் பாடிவர அவர்கள் கூட்டத்திலே கதிர்காமக் கந்தனும் ஆடி வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சியே.

வருடா வருடம் வெகு கோலாகலமாக நடைபெற்று வரும் இந்தக் கதிர்காம விழா இம்மாதம் 17-ம் திகதியன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 1-ம் தேதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுற இருப்பது இன்றைய சூழ்நிலையில் கதிர்காமக் கந்தனின் அடியார்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

ச. சோதிலிங்கம்

அன்னையை வணங்குவோம்

அன்னையை வணங்குவோர்க்கே
அல்லல் போம் சுகம் உண்டாகும்
நன்மைசெய் கல்வி சேரும்
நற்பொருள் தானும் மேவும்
மன்னுநற் குணங்கள் சேரும்
வளமெலாம் வந்தே எய்தும்
இன்னுமே அனைத்தும் எய்தும்
இன்பமே நேரும் தானே.

கண்ணா தச்சுத் தொழிலகம்
உரிமையாளர்:- S. சரச்சந்திரன்
38, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் இன்று கொடியேற்றம்.

உலகெலாம் ஈன்ற அன்னை

உலகெலாம் ஈன்ற அன்னை
உயிர்க்கெலாம் அருளும் அன்னை
நலமெலாம் வழங்கும் அன்னை
ஞானமாய்த் திகழும் அன்னை
தலமெலாம் காட்சி நல்கித்
தனையினர் உவக்கச் செய்யும்
உலக மாதாவாம் அன்னை
உயர் தெய்வம் காளி அன்னை

மூகாம்பிகா வீடியோ,
117, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் இன்று கொடியேற்றம்.

# "சான்றோரை உருவாக்கிய கல்லூரி" மத்திய கல்லூரி விருந்தில் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண மத்திய கல்லூரி, நூற்றைம்பது வருடமாகக் கல்வித்துறையில் பெருமைப் படத்தக்க சாதனையை ஆற்றியுள்ளது. சிறந்த கல்விமான்கள் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் தோன்றியிருக்கிறார்கள். இச்சேவையைப் பெருமையுடன் ஆற்றிரும் இக் கல்லூரி, இன்னும் பல்லாண்டு காலம் கல்விச சேவை புரிய வாழ்த்துகின்றேன்"

இவ்வாறு, யாழ்ப்பாணமத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு தினவிழாவையொட்டிய மதிய விருந்துக்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் உரையாற்றுகையில் தெரிவித்தார்

இவ்வைபவத்திற்குக்கல்லூரி அதிபர் திரு வி.பாலசுந்தரம் தலைமைதாங்கினார்.

வைத்திய கலாநிதி ஜே பி சி.பிலிப் உரையாற்றுகையில் "பழைய மாணவர்கள் ஒவ்வொரு கல்லூரியிலும் நல்ல சேவையாற்ற முடியும். ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் கல்லூரி அதிபர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகிய நான்கு பிரிவினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் நல்ல சந்ததியினரை உருவாக்க முடியும், என்றார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஏ இராஜரத்தினம் உரையாற்றுகையில், கல்வித்துறையில் நூற்றைம்பது ஆண்டுகள் சாதனை என்பது சாதாரண விஷயமல்ல என்றும், பலசான்றோர்களை உருவாக்கிய பெருமை யாழ் மத்திய கல்லூரிக்கு உண்டு என்றும் கூறினார்

வைபவத்தில் டாக்டர் எஸ் சி ஜெயராஜ் டி வாமதேவன், எல் ஜி அரசரத்தினம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (கெ)

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்தா ஒழுங்கையைச் சேர்ந்த பொன்னையா தம்பிப்பிள்ளையின் மரணச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்

— மரணித்தவர்

பொன்னையா தம்பிப்பிள்ளை கைம்பெண் பிலோமினு சுகிர்தமலர் "செல்வராசா பவனம்" செங்குந்தா ஒழுங்கை திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

மனுதாரர்

இல: தத்துவம் 3876

எதிர்

1. தம்பிப்பிள்ளை புளோறியன் சுரேந்திரராஜ்
2. தம்பிப்பிள்ளை கிறிஸ்ரெல்லா பகீரதி
3. தம்பிப்பிள்ளை டொமினிக் ரவீந்திரராஜ் (பராயமற்றவர்)
4. தம்பிப்பிள்ளை சிசில் கனகடகிரதி (பராயமற்றவர்)

எல்லோரும் செங்குந்தா ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்.

3-ம், 4-ம் எதிர்வாதிகளாகிய பராயமற்றவர்களின் வழக்குப் பாதுகாவலர்

5. பெஞ்ஜமின் மரியதாஸ் 734 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

எதிர்வாதிகள்

மேலே இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 5-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு பங்குனி மாதம் 1-ம் திகதி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு
(ச கிருஷ்ணகுமார்)
மனுதாரின் சட்டத்தரணி
o-7-85

காரணம் காட்டும் திகதி 16 - 8 - 85 க்கு நீடிக்கப்படுகிறது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
4,89

---

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று

வல்வெட்டி பிரதான வீதியில் வசித்து மரணசாதனமின்றி மரணமெய்திய திரு. செல்லப்பா செல்வநாயகம் அவர்களின் மரணச்சொத்து விடயமாக,

மரணமெய்தியவர்

செல்லப்பா செல்வநாயகம் கைம்பெண் மகேஸ்வரி, பிரதான வீதி, வல்வெட்டி.

மனுதாரர்.

தத்துவம்
இல: 1220 / T

எதிராக

1. செல்வநாயகம் மகள் மதிவதனி
2. செல்வநாயகம் செல்வச்சந்திரன்
3. செல்வநாயகம் ரவிச்சந்திரன்

பராய மடையாத 4. செல்வநாயகம் மகள் பதிமவதனி

5. அம்பலவாணர் வர்கள் செல்வரட்ணம், 103, ஸ்ரெசன் வீதி கொக்குவில்.

எதிர்வாதிகள்

மேலே பெயர்கொண்ட மரணச் சொத்துவழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அறிய அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டாளை பதியப்பட்டுளளது: என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி காலை 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 14ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்

ச. நடராசா

வரைவு
மனுதாரின் சட்டத்தரணி
சி. வல்லிபுரம் 4584

---

நாளை

## சைவப்பெரியாரின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சைவப்பெரியார் புலோலியூர் சு. சிவபாதசுந்தரனாரின் குருபூஜை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்

இவ் வைபவத்தினை அடுத்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பழையமாணவர்களும் அபிமானிகளும் கலந்து கொள்கின்றனர்.

---

## விவசாய கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி விவசாயக் கருத்தரங்கு ஒன்றை பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பில் விரைவில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு சபா. நாராயணன் மேற்கொண்டு வருகின்றார்.

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை விசுவநாதர் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்:

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் ) இல. ரி/233.

சங்கரப்பிள்ளை விசுவநாதர் கைம்பெண் சிவகாமிப்பிள்ளை தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

—மனுதாரர்

எதிராக

1. சங்கரப்பிள்ளை சிவபாதசுந்தரம், மலேசியா
2. குமாரு கந்தையா
3. கணவதிப்பிள்ளை விசுவலிங்கம்
4. பெண் சரஸ்வதி
5. தம்பிப்பிள்ளை ராதா
6. தம்பிப்பிள்ளை பாலகிருஷ்ணன்
7. வைத்திலிங்கம் முருகையா
8. பெண் மாயா
9. தம்பிப்பிள்ளை முத்துக்கிருஷ்ணன்
10. தம்பிப்பிள்ளை பாலகிருஷ்ணன்
11. தம்பிப்பிள்ளை சாந்தினி
12. தம்பிடபிள்ளை ரோகினி
13. தம்பிப்பிள்ளை இராமகிருஷ்ணன்.

அனைவரும் தொல்புரம் மேற்கு.

—எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பினனுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைடபடுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ம் திகதி.

கோட்டுக்கட்டளைப்படி,

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

தயாரித்தவர்:
க. குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.
4547

---

## மானிப்பாய் வட்டார உடற்பயிற்சி போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் கல்வி வட்டார உடற்பயிற்சிப் பாட்டி சென்ற 15-ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் தலைமையில் நடைபபற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் 19, 17 வயதுக்குக் கீழ் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையும், 13 வயதுக்குக்கீழ் ஆண்கள் பிரிவில் நவாலி மகாவித்தியாலயமும் 19 வயதுக்குக்கீழ் பெண்கள்பிரிவில் இணுவில் இராமநாதன் கல்லூரியும் 17 வயதுக்குக்கீழ் பெண்கள் பிரிவில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியும், 13 வயதுக்குக் கீழ் பெண்கள் பிரிவில் சுதுமலை சின்மயா வித்தியாலயமும் முதலிடத்தைப் பெற்றன.

பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட உடற்கல்வி அதிகாரி திரு வி தங்கராஜாவும், மானிப்பாய் வட்டார உடற்கல்வி அதிகாரி திரு வி. கணேசலிங்கமும் கலந்து கொண்டனர்.

---

## யாருடையது?

நல்லூர் தொகுதி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் ஒரு திறப்பு கோர்வையைக் கண்டு எடுத்து 'ஈழநாடு'' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கொக்குவில், சம்பியன் லேனைச் சேர்ந்த மரணசாதனமின்றிமரணமெய்திய அமிர்தலிங்கம் சிறீதான் என்பவரின் மரணச் சொத்து விடயத்தில்,

—மரணமெய்தியவர்.

தம்பி நடராசா,
இல: 13, ஒடை ஒழுங்கை-வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

—மனுதார்.

வழ: இல. மரணச் சொத்து நியாயாதிக்கம் } 3885

எதிராக:

1. தம்பி சிவராசா, இல. 417, காங்கேசன் துறை வீதி, யாழ்பாணம்.
2. சுப்பிரமணியம் குமாரசாமி, 29/1, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்
3. எஸ். ஜெயபாலரத்தினமும் பெண்
4. சிதாலட்சுமியும் இருவரும், ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
5. சாந்தலிங்சம் கனகரத்தினமும் பெண்
6. தேவிகாராணியும்,
7. அமிர்தலிங்கம் மகள் ஜெலட்சுமி,
8. அமிர்தலிங்கம் மகள் யோகலட்சுமி,
9. அமிர்தலிங்கம் மகன் அமிர்தசௌரி.

எல்லோரும் இல. 25/14 ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்

பிரதிவாதிகள்.

மேலே குறிப்பிட்ட இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொதகை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்படடு, அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985 ம் ஆண்டு ஆவணி மாதம் 30 ந் நாளன்று முற்பகல் 9- 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்

1985 ம் ஆண்டு சித்திரை மாதம் 29ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

கு குலசிங்கம்,
பதிவாளர்.

என்னால்வரையப்பட்டது.
மனுதாரின் சட்டத்தரணி.
த.சோமசுந்தரம்,
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,
93/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். 4577

---

## தமிழ்த்தின போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து பிரதம பாடசாலையில் தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 23-ம் திகதி நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் நடைபெறும் இப்போட்டி வாசிப்பு, உருப்பெழுத்து, பா ஓதல் என்ற அம்சங்களில் நடைபெறவுள்ளது அதிபர் திரு. மு திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் ஆசிரியர்கள் இப்போட்டியை நடத்த ஒருங்கு செய்துள்ளனர்.

---

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவில் வசித்த குமாரசாமி லோகேஸ்வரனின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

காலஞ்சென்றவர்.

லோகேஸ்வரன் கைம்பெண் தவமணிதேவி, 19/1, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். மனுதார்

வழ. இல. தத்துவம் /3887

எதிராக

பராய மற்றவர் {
1. லோகேஸ்வரன் கஜேந்திரன்,
2. லோகேஸ்வரன் மகள் அனுசியா
3. லோகேஸ்வரன் மகள் சர்மிலா
4. லோகேஸ்வரன் தனரஞ்சன் எல்லோரும், 19/1, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்

பராயமற்ற 1ம், 2ம், 3ம் 4ம் பிரதிவாதிகளின் வழக்குபாதுகாவலர் 5ம்பிரதிவாதியாகிய

5. ஐயாத்துரை துரைராஜா, 108, ஐயனார் கோவில் தெரு, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிருவகிப்பதற்காகமேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளஆள்எவரேனும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 8ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு குலசிங்கம்
பதிவாளர்

வரைந்தது
தி. ஜெகதீசன்
மனுதாரின் சட்டத்தரணி,
(4573)

சோபிகா மினி
(பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 6-15
பாலாஜியின் வெற்றிப் படைப்பு
மோகன் - சரிதா
அண்ணி

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு மட்டும்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில்/ வெலிங்டன் தியேட்டர் சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30,
7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
21-7-85 மட்டும்
10-30,. 2-30, 6-30,
எம் ஜி. ஆர். சரோஜா
வீரப்பா நடிக்கும்
ஜெனோவா
(புதிய பிரதி)

Windsor
வெண்திரையில்
Daily 10-30, 2-00, 4-30,
7-00
Blue Lagoon
வாலிபன் யுவதியின் காதல் ஓவியம். கன்னிப் பெண்ணின் காதல் சாகசங்களைக் காணத் தவறாதீர்கள்.
வயது வந்தவர்கட்கு மட்டும்.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p m
LEE MARVIN
THE BIG RED ONE
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to Midnight
(Adults Only)

மொடேர்ண்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 3 காட்சிகள்
இளமை
ஆனந்த்பாபு-ஜீவிதா
அர்ஜுன்-அனிதா
புதிய வெளியீடு

உஷா மினி
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-30
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே. முந்துங்கள், தவறவிடாதீர்கள்.

மேபெயர் மினி
(கன்னாகிட்டி)
10-30, 2 30, 6-30
எம் ஜி ஆர் —லதா
நேற்று இன்று நாளை

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Devid Warbeck
Annie Bellie in
"HUNDRED TIGERS"
ACTION PACKED
ஓர் பிரமாண்ட கடத்தல் கும்பலை முறியடிக்கிறது. இராணுவம்- சாதுர்யமாக தப்பும் தலைவன் மட்டும் ஒரு சிறு தீவு ஒன்றில் தஞ்சமடைகிறான் அங்கும் இராணுவத்தின் தாக்குதல்—தப்புவதற்கு அவன் புரியும் வீரதீரங்கள்—திகிலும், விறுவிறுப்பும் ஊட்டுகிறது. அவன் தப்புகிறானா? முடிவென்ன?

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30, 12-30, 2-30,
4-45, 7-00
I spit on your Grave
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கொடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திரவதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள் சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

பாலகன்
வீடியோ விஷன்
சாந்தி சினிமா முன்பாக
தினசரி 10-30,
2-30, 4-30, 6-30, 9-30
Richard Roundtree in
Shaft in Africa
(Adults only)
கறுப்பு இனத்தை சேர்ந்த ஒருவன் தனது இனத்தை காப்பாற்ற எடுக்கும் முயற்சியும் அவனை காதல் வலையில் சிக்கவைப்பதற்கு கன்னியர் படும் பாட்டையும் கண்டுகளிக்க இன்றே பாருங்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45. 9-00
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
இல்க்சுமிதா, ஜெய்சங்கர்

## வேரவில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி

[பூநகரி]

வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 6-ம் திகதி அதிபர் திரு. தி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இவ்வைவத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கொடி ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக பரந்தன் பகுதி வட்டாரக்கல்வி அதிகாரி திரு நா. தணிகாசலம்பிள்ளை, கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி ஜனுப் இனநு, இரணைதீவு பங்குத் தந்தை வண. பிதா கொன்ஸலாக ஆகியோர் கலந்துகொண்டனர்

போட்டியில் முதலிடத்தை இளங்கோ இல்லமும், இரண்டாமிடத்தை கம்பர் இல்லமும், மூன்றுமிடத்தை பாரதி இல்லமும் பெற்றுக்கொண்டன

கல்விப் பணிப்பாளர் தமது உரையின்போது "இப்பாடசாலையின் விளையாட்டுப் போட்டி முன்னணிவகுக்கும் பாடசாலையின் தரத்துக்கு ஒப்பானது என்றும் கிராமத்து மக்கள் பரிசில்களை வழங்கியது மட்டுமல்லாது விழாவில் கலந்து கொண்டமை சிறப்பு அம்சமாகும் என்றும் கூறினார்.

## யாருடையது?

யாழ். தொலைபேசி தொடர்பு காரியாலய உத்தியோகத்தர் ஒருவரால் சுதுமலை, தாவடிக்கு மிடையில் சிறுதொகை பணத்துடன் ஒரு வெர் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர் சம்பந்தப்பட்ட காரியாலயத்தில் நேரில் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## உலக விவகாரம்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கெதிராக தொடுத்திருப்பதால் பாகிஸ்தான் ஆயுதங்களைக் குவிப்பது குறித்து ஆப்கானிஸ்தானும் இந்தியாவும் கவலை கொள்வது சட்டத்துக்கு அமைந்ததே.

பாகிஸ்தானும் இலங்கையும் கொண்டஉறவு இந்தஆட்சியில் மட்டுமல்ல, கடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிஆட்சியிலும் காணப்பட்டது இந்தியாவுக்கு புரியாத புதிரல்ல இந்தியத் துவேஷம் இலங்கைக்கு இயற்கையாக இருப்பதை, செயற்கை முறையிலாவது- சத்திர சிகிச்சை மூலம் அகற்றுவது ஒரு காலத்தில் தவிர்க்கமுடியாத காரியமாக வரலாம்.

லதா மினி
(கே... ...)
10-30 3 30 6 45
ஆனந்பாபு—ஸ்ரீவிதா
பாடும் வானம்பாடி

கஜேன்
மினி சினிமா
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30,
4-30, 7-00
Beach Girls
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ஹரன்
வெண்திரையில்
10-30, 2 30, 4-30,
6-15
Julie —Christie
in
Demon Seed

# பிரான்ஸ்-அவுஸ்திரேலியா குண்டுகள்வெடித்து நால்வர் பலி!

(லண்டன்)

பிரான்ஸில் ஒருகட்டிடத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தின் காரணமாக மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

இதே வேளையில் அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரில் தேவாலயம் ஒன்றில் குண்டு வெடித்ததால் ஒருவர் கொல்லப்பட்டார். சுமார் 50 பேர் காயமடைந்தனர்.

## '24ம் 25ம் திகதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கவும்"

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 24 25-ம் திகதிகளில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்குபபடி தமிழீழ அதிரடிப்படை (சி. யு ரி ஈ.) சுவரொட்டிகள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது

மறைந்தும்மறையாதபோராளிகளுக்கும் விடுதலைப் போராட்டத்துக்கு உரமிட்ட ஈழமக்களுக்குப் வீரவணக்கம் செலுத்துமமுகமாகவும், சிங்களபேரினவாதத்துக்கு இரையான விடுதலைப் போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக இந்த ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு அச்சுவரொட்டிகளில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (மா)

## சேருவிலயில் ஒருவர் சடலம்

(திருகோணமலை)

சேருவிலப் பகுதிக் காடொன்றில் ஒருவரின்சடலம் கண்டெடுக்கப் பட்டுள்ளது

திருகோணமலை பதில் நீதவான் எம். கே செல்வராசா மரண விசாரணையை நடத்தினார்.

இறந்தவர் பெயர் திலகநாயக்கா என்று அறியப்படுகிறது இவர் மாடு மேய்க்கச் சென்றபோதே மர்மமான முறையில் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை அண்மையில் சேருவலப் பகுதியில் 12 பேர் மர்மமான முறையில் காணமல் போனது தெரிந்ததே.

## கைதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இளைஞர் தன்னை ஒரு முஸ்லிம் என்று அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் இவர் தமிழ் இளைஞராக இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர். (து)

## இராணுவம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரவாதிகள் முகாமுக்கு அருகில் உள்ள கராஜுக்குள் ஒரே இரத்தக்கறையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறுத்தத்துக்குப் பின் கடந்தஇருநாட்களாகப்பொலிகண்டிக் கடற்கரைப் பகுதியில் உள்ள வீதியில் ஆயுதப்படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (மா)

## வன்முறை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

'வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களையும வெடிமருந்துகளையும் தீவிரவாத இயக்கங்கள் பெற்றுவருகின்றன இவ்வியக்கங்கள் யாவும் தமிழ்நாட்டின் உதவியையும் பெற்றுவருகின்றன அங்கு இராணுவப்பயிற்சி முகாம்களும் நிறுவப்பட்டுள்ளன

தீவிரவாதிகளுக்கு உதவி செய்வதைவிட இலங்கை மீது படையெடுக்கும்படி இந்தியாவை நான் கேட்டிருந்தேன். இதுசம்பந்தமாகப் பல நாடுகளுக்கும் தெரியப்படுத்தியதாலேயே உலகத்தின் கவனம் இலங்கைமீதுதிருப்பப்பட்டது.

உண்மையை உணர்ந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நட்புறவு ரீதியில் பேச்சுக்களை நடத்த இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்திருந்தார்." [து]

## கடத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை இளைஞர்கள்மீட்டனர்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கல்விவட்டாரப் பாடசாலையொன்றிலிருந்து இனந்தெரியாதநபர்களால் கடத்திச் செல்லப்பட்ட 2-ம் தவணைக்கான கேள்விப்பத்திரப் பொதிகளை இளைஞர் கோஷ்டி ஒன்று மேற்கொண்ட தீவிரமுயற்சியினால் மீண்டும் கைப்பற்றப் பட்டது

இப்பொழுது 2-ம் தவணைக்கான பரீட்சை நடைபெற்று வருவது தெரிந்ததே. (மா)

## வரப்பெற்றோம்

நூல்: முல்லை
வெளியீடு:
பூவசரசங்குளம்
மகாவித்தியாலயம்

வன்னி மண்ணின் வாசனையை அள்ளித்தருகின்ற மலராக 'முல்லை' என்னும் இதழ் பூவரசங்குளம் மகாவித்தியாலய வெளியீடாக வெளிவந்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் இலக்கிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என்பன வற்றைத் தாங்கி வந்திருக்கும் 'முல்லை' இப்பொழுது இரண்டாவது இதழாக வெளிவந்துள்ளது.

இதற்கு முன்பு வந்த 'முல்லை'யைவிட இப்பொழுது வந்த 'முல்லை'யில் பயனுள்ள பல விடயங்கள் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது

பாடசாலை மாணவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் 'முல்லை' போன்ற இதழ்கள் இன்னும்பல வெளிவருவதுடன் ஈழத்து இலக்கிய உலகில் பாடசாலை மாணவர்களின் படைப்புகள் வளர ஊக்கமளிக்க வேண்டும்.

இந்த முல்லையில் ''இலட்சியங்கள் இறப்பதில்லை'' என்ற சிறுகதையொன்று வெளிவந்துள்ளது. இக்கதை சமகாலப் பிரச்னையை உள்ளடக்கியதாக எழுதப்பட்டுள்ளதால் வாசகர் மனதில் நிலை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இருந்தாலும் இக்கதையில் சில மாற்றங்கள் செய்து எழுதப்பட்டிருந்தால் வாசிபபதற்கு மேலும் சுவையாக இருக்கும்.

மாணவர்களின் ஆக்கங்களை தொகுத்து அவர்களின் எழுத்திற்கு களம் அமைத்துக் கொடுத்த முல்லை மலரைப் பாராட்டுவதில் நாம் பெருமையடைகிறோம்.

என். கே. துரைசிங்கம்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## ராஜீவ் - சிவாஜி சந்திப்பு

(புதுடில்லி)

திரைப்பட நடிகரும் ராஜ்ஜ சபா உறுப்பினருமான திரு. சிவாஜிகணேசன் கடந்த வெள்ளிக்கிழமை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்து 20 நிமிடம் பேச்சு நடத்தினார். இந்தியாவின் அரசியல்நிலை குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல் விவகாரம் குறித்து இவர்கள் பேசியதாகக் கூறப்படுகிறது.

புதுடில்லியில் காமராஜர் சிலை திறப்புவிழாவுக்காக திரு. சிவாஜிகணேசன் புதுடில்லி சென்றிருந்தார்.

## மரண அறிவித்தல்

### D. C. விக்கிரமறட்ண

D. C. விக்கிரமறட்ண (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) அகால மரணமடைந்து விட்டார். இவர் நேசரெட்ணத்தின் (அரசினர் வைத்தியசாலை, சங்கானை) அன்புக் கணவரும், குணசிறீ, கபிலசிறீ, சுமணசீலி, அமுதசீலி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயதாசன் (சவூதி) ஜெயந்தி ஆகியோரின் மாமனாருமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: நேசரெட்ணம் (மனைவி)
மாயவில்லா, மாதகல். 4603

## மரண அறிவித்தல்

### கந்தையா செட்டி-காசிலிங்கம்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் கில்னர் லேனில் வசித்தவருமாகிய திரு காசிலிங்கம் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்ததேவி (பரீஸ்), ஸ்ரீஸ்கந்தமலர் (பரீஸ்), சிவகுமாரி [யாழ் இராமநாதன் நுண்கலைக் கழகம்), தமிழ்ச்செல்வி, பாலமுருகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாயகம் (பரீஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், வேலவன் (பரீஸ்) அவர்களின் அருமைப் பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் 22-7-85 திங்கள் காலை 11 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
4604 மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சங்குவேலி இ. மோகன முகுந்தன்

(முன்னாள் கிளை முகாமையாளர் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்)

மந்துவில் இரத்தினம் மோகன முகுந்தன் சுவிட்சர்லாந்தில் மாரடைப்பால் காலமானார். இவர் காலஞ்சென்ற ஏகாம்பரம் இரத்தினம், திருமதி இராசேஸ்வரி இரத்தினம் ஆகியோரது சிரேட்ட புதல்வனும் செல்விகள் மோகன வதனி, சுகந்தினி, சுபாசினி ஆகியோரது அன்பு அண்ணனும், சங்குவேலி இந்திராணியின் அன்புக் கணவனும், தாரிணியின் அன்புத் தந்தையாரும், சங்குவேலி திரு. திருமதி அரசஇரத்தினம் அவர்களது மருமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-7-85 செவ்வாய்க்கிழமை மு. ப. 11 மணிக்கு சங்குவேலியில் நடைபெற்று தகனக்கிரியைக்காக "சங்கம் புலவு" மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இத்தகவலை அறியத்தருகிறோம்.

சங்குவேலி சி அரசஇரத்தினம்
மானிப்பாய். இளைப்பாறிய அதிபர்

4601

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126,

## விபத்தில் பெண்பலி!
## வேலணையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

லொறி- ஸ்கூட்டர் விபத்தில் பெண்மணி ஒருவர் பரிதாபகரமாகப் பலியானார்.

கொழும்பு தேசிய அபிவிருத்தி வங்கித்திட்டமிடல் உத்தியோகத்தர் திருமதி நிர்மலா நடேசன் 34 வயது) என்பவரே மரணமானவராவார்.

நேற்று நண்பகல் வேலணை வங்களாவடியில் இவ்விபத்து இடம் பெற்றது.

விபத்தில் மரணமான நிர்மலா நடேசனின் மரண விசாரணை நேற்று பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி க கேசவன் முன்னிலையில் நடைபெற்றது. பொலிஸ் சார்ஜன்ட் திரு. பரமேஸ்வரன் சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

மரணமானவரின் கணவரான நடேசன் (36 வயது) என்பவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

கொழும்பு தேசிய அபிவிருத்தி வங்கியில் இருவரும் கடமையாற்றி வந்தோம். இருவரும் விவாகம் செய்து ஒரு வருஷமாகிறது. கடந்த 16-ம் திகதி கொழும்பிலிருந்து வந்து தெல்லிப்பழை வறுத்தலை விளானிலுள்ள எனது வீட்டில் தங்கி இருந்தோம் (நேற்று) காலை 10மணியளவில் நண்பர் ஒருவரின் ஸ்கூட்டரில் எனது மனைவியின் பிறந்தஇடமான புங்குடுதீவுக்கு சென்று அங்கிருந்தோம் (நேற்றுப்) பிற்பகல் கொழும்புக்குச் செல்ல வேண்டியிருந்ததால் 11-45 மணியளவில் இருவரும் ஸ்கூட்டரில் புறப்பட்டோம் எனது மாமனும் மாமியும் உடனே திரும்ப வேண்டாம் சற்று நின்று போகலாம் என வற்புறுத்தியும் அவசியம் போக வேண்டியிருக்கிறது என்று சொல்லி விட்டுப் புறப்பட்டோம்.

வேலணை வங்களாவடியில் சென்றுகொண்டிருந்த லொறியொன்றை விலத்தும்பொழுது இருவரும் ஸ்கூட்டரிலிருந்து விழுந்து விட்டோம். அப்பொழுது வேகமாகவந்து கொண்டிருந்த லொறி எனது மனைவிமீது ஏறியதை அறிந்து அதிர்ச்சியடைந்தேன் உடனடியாக அதே லொறியில் எனது மனைவியை ஏற்றிக் கொண்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்துகொண்டிருந்த பொழுது இடைநடுவில் அந்த லொறி இயங்க மறுத்ததைத் தொடர்ந்து நண்பகல் 1-45 மணியளவில் கார் ஒன்றில் ஏற்றிக் கொண்டு வரும்வழியில் அவர் இறந்துவிட்டார்.

லொறிச் சாரதியை எனக்குத் தெரியாது. அவரைக் கண்டால் அடையாளம் காட்டுவேன்".

கணவனின் சாட்சியத்துக்குப்பின்னர் இச்சம்பவத்தைக் கண்டவர்கள் யாராக இருந்தாலும் தமக்கு முன்னிலையில் சாட்சியமளிக்கலாம் என்று மரணவிசாரணை அதிகாரி கேட்டுள்ளார்.

மேலும் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

(மா)

## மூதூரில் அரசஜீப் கடத்தப்பட்டது

(திருகோணமலை)

மூதூரிலுள்ள ஈச்சிலம்பற்றை என்ற இடத்தில் அரசாங்க அதிகாரிகள் சென்றஜீப் ஒன்று நேற்று முன்தினம் இனம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

மூதூரிலுள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிடச் சென்றபோதே இந்தஜீப் கடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

## பேராசிரியர் சண்முகதாஸ் ஜப்பான் செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாரம் ஜப்பான் செல்கிறார் விடுமுறைகால லீவினைப்பயன்படுத்தி ஜப்பான் செல்லும் இவர் டோக்கியோவிலுள்ள ஹச்சுயின் பல்கலைக் கழக இலக்கிய பீடத்தில் ஜப்பான் மொழியியற் பேராசிரியர் சுசுமு ஓனோவுடன் தமிழ் ஜப்பானிய மொழி பண்பாட்டு உறவுபற்றி ஆய்வு நிகழ்த்தவுள்ளார். டோக்கியோ ஹச்சுயின் பல்கலைக் கழகத்தின் அழைப்பின் பேரிலேயே அங்கு செல்கின்றார்.

(நா)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற தலைமைக் கங்காணி, புகையிரத வேலைத்தளம் இரத்மலானை)

வட்டுக்கோட்டை கண்ணகையம்மன் கோவிலடியைச் சேர்ந்த சரவணமுத்து சிவப்பிரகாசம் 19-7-85 ல் காலமாகிவிட்டார் இவர் கமலகிளியின் அன்புக் கணவரும், கமலதேவனின் [பிரான்ஸ்] அன்புத்தந்தையுமாவார்: அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-7 85 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர். நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ச. குலராசா ,வட்டுக்கோட்டை. 4595

## மரண அறிவித்தல்

### அன்னு அன்னபூரணம் குட்டி

பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி அன்னு அன்னபூரணம் குட்டி காலமாகிவிட்டார். இவர் விக்ரர் குட்டி மூதூர் அரசினர் ஒப்பந்தகாரரின் அன்பு மனைவியும், புஷ்பம், இரத்தினவேல் ஆசிரியை பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாசாலை, சுகிர்தம் ஆசிரியை பாலர் பாடசாலை வை. எம். சி. ஏ பண்டத்தரிப்பு ஆகியோரின் அன்புத்தாயாரும், இரத்தினவேல் ஆசிரியர் சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, முத்துராசா ஜேர்மனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22-07-85 திங்கட்கிழமை பி. ப. 3-30 மணிக்கு பண்டத்தரிப்புத் திருச்சபைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 4599

## மரண அறிவித்தல்

### பொன்னையா நவரட்ணம்

இளைப்பாறிய பிரதி தொழில் ஆணையாளர் [Deputy Commissioner of Labour) நவரட்ணம் காலமானார். இவர் கணபதிப்பிள்ளை பாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி தவமணி ஜெகநாதன் [Zambia], தெய்வேந்திரன் (Oman), லோகராஜா (U. K.), திருமதி நவமலர் பிரகாஸ்பாலன் (U S. A), ராசநாயகம் (Hotel Brighton) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற Dr. ராசசிங்கம் (W. H. O.), இராசம்மா சுப்பிரமணியம், காலஞ்சென்ற ரத்தினசிங்கம் (Accoutant), தங்கம்மா சேனாதிராசா, காலஞ்சென்ற செல்லம்மா ஆழ்வாப்பிள்ளை, காலஞ்சென்ற நடராசா (Hartley College), ராசேந்திரம் (A O S.H S. Office), மகேஸ்வரி நடராசா, பாலசிங்கம் (Hartley College) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை (25-7-85) 9 00 மணியளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 4602

## மரண அறிவித்தல்

அநுராதபுரம் நியூ விஜேந்திரா படமாளிகை உரிமையாளரான **திரு. செல்லத்துரை சிவஞானசுந்தரம்பிள்ளை** காலமானார்.

இவர் திருப்பதி அவர்களின் அன்புக் கணவரும், கஜேந்திரநாத், மிருணாளினி, டாக்டர் விஜேந்திரநாத் (கொழும்பு)' சுஜேந்தரநாத், ஜெஜேந்திரநாத் (கணக்காளர், கொழும்பு). நிஜேந்திரநாத் (Holland), ராஜேந்நாத் (Engineer Saudi Arabia) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் (கடற்தொழில் திணைக்களம், முல்லைத்தீவு). இந்திரலேகா, வள்ளிநாயகி, சாந்தாரமணி (ஆசிரியை, மாபொல, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், விஜயகாந்த், விஸ்ணுகாந்த், விஜயதட்சனி, விஜயபிரதாப், விஜயதர்சன், ஸ்ரீகௌசிகா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (22-7 85) காலை 10 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோவில் வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் சுன்னாகம் கொத்தியால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4597